**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons), மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2056, திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 24–ம் தேதி**

**2026– ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07–ம் நாள் செவ்வாய்கிழமை**

**அசல் வழக்கு எண் –69/2019**

**C.N.R.No.TNSV15000148–2019**

---

அருள்மிகு மொட்டையசாமி கோவில்
திருப்புவனம் புதூர்,
அதன் மேனேஜிங் டிரஸ்டி உய்யாராணி மூலமாக .....வாதி

**/எதிர்/**

1.T. செல்வராஜ்
2.சுப்ரமணி
3.V.முத்துலட்சுமி
4.லட்சுமிபிரியா
5.A.ஞானேஸ்வரி
6.M.சரண்யா ...1 முதல் 6 பிரதிவாதிகள்
7.உதவி ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை ......7ம் பிரதிவாதி

இவ்வழக்கு கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மானாமதுரையில் OS No.122/2016 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் பின் இந்நீதிமன்ற ஆளுகைக்கு உட்பட்டதால் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் OS No.69/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில், இவ்வழக்கு என் முன்பாக 12.01.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.சங்கர்கணேஷ் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆதிமூலம் அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.வீரபாண்டி அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.விநாயகமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 7ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.S.சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும் இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரைகள் இருதரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:30:08 +0530

**தீர்ப்புரை**

வாதி இந்த தாவாவை தாவா சொத்து அருள்மிகு மொட்டையசாமி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும், கடந்த 05.03.1999ம் தேதியிட்ட ஆவண எண்.351/1999 ஆக ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் செல்லத்தக்கதல்ல (Null and void) பரிகாரம் கோரியும், வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ அவரது வகையாட்களோ எவ்வித தடையும், இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா சொத்தில் பிரதிவாதியோ அவரது வகையாட்களோ அத்துமீறி நுழையவோ அல்லது கட்டிடங்கள் எதுவும் எழுப்பவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாவா சொத்து சம்பந்தமாக நிர் வில்லங்கம் எதுவும் ஏற்படுத்தக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட கோரியும், தாவா கோவில் நிர்வாகத்தில் அனுசியாவின் உதவியோடு 1ம் பிரதிவாதி தலையிடாமல் இருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:**

தாவா கோவில் சமூகம் நீதிமன்ற ஆளுகைக்கு உட்பட்ட சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், திருப்புவனம் புதூரில் அமைந்துள்ளதாகவும், அருள்மிகு மொட்டையசாமி கோவிலானது திருப்புவனத்தில் அமைந்துள்ள தனியார் கோவில் என்றும், மேற்படி கோவில் திருவேங்கடம் செட்டியார் என்பவரின் மூதாதையருக்கு பாத்தியப்பட்டதாக இருந்தது என்றும், மேற்படி தாவா சொத்து ஆதியில் தென்னந்தோப்பாக இருந்ததாகவும், அதன் பின்னீடு பேருந்து நிலையமாக மாற்றப்பட்டதாகவும், அதில் ஒரு சிறிய பகுதியான 45 செண்டை கோவிலுக்கு அற்பணிக்கப்பட்டதாகவும், தாவா கோவிலை நிர்வகிப்பது சம்பந்தமாகவும், அறங்காவலர் குழு சம்பந்தமாகவும் பிரச்சனை இருந்து வந்ததாகவும், அதுதொடர்பாக மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.65/39 என வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதுவும் முழுமையான விசாரணைக்கு பின்னர் கடந்த 31.10.1940ம் தேதியில் தாவா கோவில் தனியாருக்கு பாத்தியப்பட்ட கோவில் என தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி தீர்ப்பினால் பாதிக்கப்பட்டவர்கள் அதனை எதிர்த்து சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.7/41

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:30:14 +0530

என மேல்முறையீடு தாக்கல் செய்து மேற்படி வழக்கில் கடந்த 02.11.1942ம் தேதியில் சமரசம் எட்டப்பட்டதாகவும், மேற்படி தரப்பினருக்கிடையே சமரசம் ஏற்பட்டு அது தொடர்பாக ஏற்படுத்திக்கொண்ட Terms of Compromise–ல் விசாரணை நீதிமன்றத்தில் எட்டப்பட்ட முடிவான கோவிலானது தனியாருக்கு பாத்தியப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்வதாகவும், மேற்படி Terms of Compromise–ல் சொல்லப்பட்டவாறு தாவா கோவிலின் அறங்காவலர் பொறுப்பை கூட்டாக பார்க்க வேண்டும் என்றும் முடிவு எட்டப்பட்டதாகவும், நிலைமை இவ்வாறு இருக்க ராமநாதபுரம் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் தாவா கோவிலின் நிர்வாகத்தில் தலையிட்டதாகவும், எனவே மேற்படி திருவேங்கடம் என்கிற திருவன் பூசாரி மற்றும் சேதுவேல்செட்டியார் ஆகியோர் மெட்ராஸ் இந்து சமய அறநியலையதுறை சட்டம் 1959 பிரிவு 63A(a)ன் கீழ் O.A.No.109/59 என மனு செய்ததாகவும், மேற்படி O.A.No.109/59 ஆனது 30.08.1960ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், இருப்பினும், மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்ட போது திருவேங்கடம் (எ) திருவன்பூசாரி அருள்மிகு மொட்டையசாமி கோவிலின் பரம்பரை அறங்காவலராக நியமிக்கப்பட்டதாகவும், எனவே மேற்படி திருவேங்கடம் மற்றும் சேதுவேல்செட்டியார் ஆகியோர் மேற்படி தாவா கோவிலின் அறங்காவலர்களாக இருந்து வந்ததாகவும், திருவேங்கடம்செட்டியார் காலத்திற்கு பின்னீடு அவரது வாரிசுகளான வாசு, சௌந்தரபாண்டியன், ஹரிராமமூர்த்தி மற்றும் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியும் மேற்படி திருவேங்கடம் செட்டியாரின் இடத்திற்கு வந்ததாகவும், மேற்படி கோவிலின் பரம்பரை அறங்காவலராக செயல்பட்டதாகவும், மேற்படி பரம்பரை அறங்காவலர்களே ஒவ்வொரு வருடமும் வரும் தை மாதத்தில் மாறுவதற்கு ஏதுவாக சுழற்சி முறையில் பூசாரியாக இருந்து வந்ததாகவும், எனவே மேற்படி வாசு, சௌந்தரபாண்டியன், ஹரிராமமூர்த்தி மற்றும் இவ்வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதி அறங்காவலர்களாக செயல்பட்டு வந்த போதிலும், மேற்படி கோவிலின் பூசாரி பொறுப்பை சுழற்சி முறையில் வருடத்திற்கு ஒருவர் என செய்து வந்ததாகவும், மேற்படி சுழற்சி முறையில் பூசாரி இருந்து வந்தது குறித்து ராமநாதபுரம் Camp Office–ல் உள்ள இந்து சமய அறநிலையதுறையின் உதவி ஆணையர் மதுரை அவர்களின் 31.03.1987ம் தேதியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், நிலைமை இவ்வாறு இருக்க தாவா கோவில் டிரஸ்ட்க்கு

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:30:19 +0530

சொந்தமான புல எண்.97/7ல் கண்ட 29 செண்டை பொறுத்து மேற்படி வாசு, சௌந்தரபாண்டியன், ஹரிராமமூர்த்தி மற்றும் இவ்வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதி ஆகியோர் டிரஸ்ட்க்கு எதிராக மேற்படி சொத்தை பயன்படுத்தியதாகவும், அதனால் மேற்படி நால்வரும் இந்து சமய அறநிலையத்துறை சிவகங்கை உதவி ஆணையர் அவர்களால் அறங்காவலர் பொறுப்பிலிருந்து தற்காலிகமாக கடந்த 20.04.1999ம் தேதியில் M.P.No.2/92/C2 மூலமாக தற்காலிகமாக நீக்கப்பட்டதாகவும், அதன் பின்னீடு மேற்படி ஹரிராமமூர்த்தியின் மனைவியும் இவ்வழக்கின் வாதியுமான உய்யாராணி, வாசுகியின் மனைவி முத்துலெட்சுமி, சௌந்தரபாண்டியன் மனைவி ராஜாத்தி, இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியான செல்வராஜன் மனைவி அனுசுயா ஆகியோர் HR & CE Act 1959 பிரிவு 54(1)ன் கீழ் தங்களை பரம்பரை அறங்காவலர்களாக மேற்படி நீக்கப்பட்ட அறங்காவலர்களின் வரிசையில் அடுத்து வருபவர்கள் என்ற அடிப்படையில் நியமிக்கக்கோரி மனு செய்ததாகவும், மேற்படி மனுவின் அடிப்படையில் இந்து சமய அறநிலையத்துறையின் ஆணையர் கடந்த 23.07.2000ம் தேதியில் பா.மூ.8176/99 மூலமாக இவ்வழக்கின் வாதியையும், மேற்படி முத்துலெட்சுமி, ராஜாத்தி, அனுசியா ஆகியோர்களையும் தாவா கோவிலின் பரம்பரை அறங்காவலர்களாக நியமித்ததாகவும், பின்னீடு கடந்த 22.05.2000–த்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி அறங்காவலர் குழுவின் தலைவராக இந்த வாதி தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், மேற்படி விஷயங்களும் கடந்த 26.08.2009ம் தேதியில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பரமக்குடி உதவி ஆணையர் அனுப்பிய தகவலில் தெள்ளத்தெளிவாக தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், இந்து சமய அறநிலையத்துறையின் இணை ஆணையர் உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பாகவே அப்போதைய அறங்காவலர்களான மேற்படி வாசு, சௌந்தரபாண்டியன், ஹரிராமமூர்த்தி மற்றும் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி ஆகியோர் தாவா கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்தை சுரண்டும் நோக்கத்தில் அவர்களுக்குள் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் கடந்த 05.03.1999ம் தேதியில் ஏற்படுத்தி கொண்டதாகவும், அதன்படி தாவா புல எண்.93/1ல் கண்ட 70 செண்டில் 40 செண்டை மேற்படி நால்வரும் அவர்களுக்குள் 10 செண்ட் என பிரித்துக்கொண்டதாகவும், மேற்படி நால்வருக்குள் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திகொண்டதாகவும், அதனை ஊர்ஜிதப்படுத்தவில்லை என்றும், மேற்படி 05.03.1999ம் தேதியிட்ட பாகப்பிரிவினை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:30:24 +0530

பத்திரத்தின் அடிப்படையில் அவரவர் பெயரில் வருவாய் ஆவணங்கள் எதுவும் மாற்றப்படவில்லை என்றும், அதனால் மேற்படி பாகப்பிரிவினை பொறுத்து சிவகங்கை இந்து சமய அறநிலையத்துறைக்கும் தெரிய வரவில்லை என்றும், ஆவணங்களில் பல ஆண்டுகளாக தாவா புல எண்.93/1ல் கண்ட மொத்த விஸ்தீரணமான 70 செண்டும், வருவாய் ஆவணங்களிலும் கோவில் பதிவேடுகளிலும் வாதி கோவில் பெயரிலேயே இருந்து வருவதாகவும், இந்து சமய அறநிலையத்துறையில் இணை ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட கோவில் அலுவலக பதிவேட்டிலும் தாவா சொத்தில் மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்ட 40 செண்டும் சேர்த்து வாதி கோவில் பெயரிலேயே இருந்து வருவதாகவும், எனவே வருவாய் ஆவணங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படாததால் மேற்படி நால்வரும் தாவா சொத்தில் எவ்வித உரிமையும், பாத்தியமும் கோரவில்லை என்றும், அதனால் தாவா கோவிலை நிர்வகிக்கும் இந்த வழக்கில் கண்ட வாதியான நிர்வாக அறங்காவலர் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், கடந்த 20.04.1999ம் தேதியிட்ட M.P.No.2/92/C2–ல் போடப்பட்ட உத்தரவிற்கு எதிராக மேற்படி வாசு, சௌந்தரபாண்டியன், ஹரிராமமூர்த்தி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் சென்னை இந்து சமய அறநிலையத்துறையில் A.P.No.16/99 என மேல்முறையீடு செய்ததாகவும், மேற்படி மேல்முறையீட்டை சென்னை இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் கடந்த 14.12.1999ல் தள்ளுபடி செய்து, கடந்த 20.04.1999ம் தேதியிட்ட உத்தரவை உறுதி செய்ததாகவும், மேற்படி உத்தரவினால் பாதிக்கப்பட்ட மேற்படி வாசு, சௌந்தரபாண்டியன், ஹரிராமமூர்த்தி மேற்படி இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி ஆகியோர் சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.119/2000 என வழக்கு தாக்கல் செய்ததாகவும், மேற்படி வழக்கும் கடந்த 08.07.2004ம் தேதியில் தள்ளுபடி செய்து தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டதாகவும், அதனை எதிர்த்து மேற்படி வாசு, சௌந்தரபாண்டியன், ஹரிராமமூர்த்தி மற்றும இவ்வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதி ஆகியோர் மேல்முறையீட்டு வழக்கு எண்.74/2004 என சிவகங்கை மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து அதுவும் கடந்த 24.06.2005ம் தேதியில் மேற்படி விசாரணை நீதிமன்ற தீர்ப்பை உறுதி செய்து தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட மேல்முறையீட்டில் மாண்பமை சிவகங்கை மாவட்ட நீதிபதி அவர்கள் தாவா

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:30:28 +0530

கோவிலுக்கு சொந்தமான சொத்துக்களை மேல்முறையீட்டாளர்கள் நால்வரும் கையாள்வது சம்பந்தமாக கண்டனம் தெரிவிப்பதாகவும், நிலைமை இவ்வாறு இருக்க இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் கண்ட மொத்த விஸ்தீரணமான 70 செண்டில் 10 செண்டை பொறுத்து 2008ம் ஆண்டு முதல் உரிமை கோரி வருவதாகவும், அதுதொடர்பாக இவ்வழக்கின் வாதி இந்த நம்பர் 1ம் பிரதிவாதிக்கு கடந்த 28.05.2008ம் தேதியில் வழக்கறிஞர் சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும், 1ம் பிரதிவாதி அவருடைய சட்டத்திற்கு புறம்பான செயல்களை நிறுத்தியதாகவும், எனவே தாவா சொத்து சம்பந்தமாக வாதி கோவிலால் அதன் பின்னீடு எவ்வித வழக்கு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், 2012–2013ம் ஆண்டிற்கான பூசாரியாக சுழற்சி முறையில் இந்த நம்பர் 1ம் பிரதிவாதி செயல்பட்டு வந்ததாகவும், கடந்த 2013–2014ம் ஆண்டிற்கு தாவா கோவிலின் பூசாரியாக ஹரிராமமூர்த்தி செயல்பட இருந்ததாகவும், ஆனால் மேற்படி ஹரிராமமூர்த்திக்கு அறுவை சிகிச்சை நடைபெற்றிருந்ததால் அவருடைய சுழற்சி முறையையும் இந்த நம்பர் 1ம் பிரதிவாதியே அவர்களுக்குள் ஏற்பட்ட பரஸ்பர புரிதலின் அடிப்படையில் செய்து வந்ததாகவும், இந்த நம்பர் 1ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் அவருடைய மனைவியும் கோவிலின் அறங்காவலர்களில் ஒருவருமான அனுசியாவும் மற்ற அறங்காவலர்களுக்கு ஒத்துழைப்பு நல்கிடவில்லை என்றும், மேற்படி அனுசியா அறங்காவலர் குழுவில் முக்கியமான முடிவு எட்டப்படுவதற்காக கூட்டப்பட்ட கூட்டத்திலும் பங்குகொள்ளவில்லை என்றும், மேற்படி கூட்டத்திற்கு அனுசியா பங்குபெறவில்லை என்றாலும் இந்த நம்பர் வாதியின் தலைமையில் இதர அறங்காவலர்கள் கூடி தாவா கோவிலை நல்லமுறையில் நிர்வகித்து வருவதாகவும், இந்த நம்பர் 1ம் பிரதிவாதி தாவா கோவிலுக்கு பாத்தியப்பட்ட புல எண்.93/1ல் கண்ட சொத்தை சுரண்ட வேண்டும் என்ற நோக்கத்தில் தாவா கோவில் சொத்தில் அத்துமீறி நுழைந்து அதில் வீடு கட்டி இருந்ததாகவும், மேற்படி வீட்டிற்கு 1ம் பிரதிவாதி மின் இணைப்பு அவரது பெயரில் மின் இணைப்பு எண்.1121 என பெற்றிருந்ததாகவும், மேற்படி சர்வே எண்.93/1ல் கட்டப்பட்டிருந்த 2 பகுதி வீட்டிற்கும் வரி இந்த நம்பர் 1ம் பிரதிவாதி பெயரில் வரி விதிப்பு எண்கள்.12/126B, 11/171 சட்டத்திற்கு புறம்பாக பெற்றிருந்ததாகவும், மேற்படி ஹரிராமமூர்த்தி பார்க்க வேண்டிய சுழற்சி முறையை இந்த நம்பர் 1ம் பிரதிவாதி பார்த்த காலத்தில் மேற்படி

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:30:33 +0530

கோவிலில் இருந்த குடிநீரை மாட்டை குளிப்பாட்டவும், மேற்படி குடி தண்ணீரை 3ம் நபர்களுக்கு விற்பனை செய்ததாகவும், இவ்வழக்கில் கண்ட வாதியான மேற்படி கோவிலின் நிர்வாக அறங்காவலர் பலமுறை கேட்டு கொண்டும் எச்சரித்தும் அதற்கு 1ம் பிரதிவாதி செவி சாய்க்கவில்லை என்றும், மாட்டு தீவனங்களை கோவில் சிலைகளுக்கு மேல் வைத்திருந்ததாகவும், அதனால் கோவில் சிலைகளையும், கடவுளையும் அவமதித்துள்ளதாகவும், கோவிலின் பூசாரி என்ற அடிப்படையில் இந்த நம்பர் 1ம் பிரதிவாதி வெள்ளி கிரீடம் தங்க கண்மலர் போன்றவற்றை அறங்காவலர்களுக்கு தெரியாமல் நன்கொடையாக பெற்றதாகவும், மேலும், தாவா கோவில் சம்பந்தமாக பிரசுரம் அடித்து அதில் இந்த நம்பர் 1ம் பிரதிவாதி பம்பையன் (எ) ராவுத்தர் பூசாரி வம்சாவழியில் வந்தவர் போன்றும், மேற்படி பிரசுரங்களில் அச்சிடப்பட்டிருந்ததாகவும், மேற்படி பிரசுரங்களில் அச்சிடப்பட்டதற்கான காரணம் தாவா கோவில் புல எண்.93/1ல் கண்ட மொத்த விஸ்தீரணம் 70 செண்டில் 40 செண்ட் இடத்தை சுரண்டுவதற்காகவே அவ்வாறு பிரசுரம் அடிக்கப்பட்டதாகவும், எவ்வித முறையான கணக்கு வழக்கும் பராமரிக்காமல் தாவா கோவிலில் பரம்பரை பூசாரி என்ற கோத்தாவில் தாவா கோவிலில் திருப்பணி நடைபெற போவதாக சொல்லி பங்காளிகளிடமிருந்தும் பக்தர்களிடம் இருந்தும் தொகை வசூலித்ததாகவும், அதற்கான ரசீதுகளை இந்த நம்பர் 1ம் பிரதிவாதி தாவா கோவிலில் பூசாரி என தெரிவித்து அச்சிட்டு கொடுத்துவந்ததாகவும், இந்த வாதி இதர அறங்காவலருடன் இணைந்து கடந்த 22.01.2013ம் தேதியில் 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாவா மொத்த விஸ்தீரணமான 70 செண்டில் இந்த நம்பர் 1ம் பிரதிவாதி அத்துமீறி நுழைந்து கட்டுமானங்கள் கட்டி வருவது சம்பந்தமாகவும், மேற்படி தாவா கோவில் சொத்துக்களுக்கு சேதாரம் விளைவிப்பது சம்பந்தமாகவும், கடந்த 03.04.2014ம் தேதியில் இந்த நம்பர் வாதி 1ம் பிரதிவாதிக்கு எதிராக திருப்புவனம் காவல் ஆய்வாளர் இடத்தில் புகார் கொடுத்ததாகவும், இந்த நம்பர் 1ம் பிரதிவாதி இந்த நம்பர் வாதி மற்றும் இதர அறங்காவலர்களை தாவா கோவிலை நிர்வகிப்பதற்கு ஏதுவாக தாவா கோவிலுக்குள் நுழைவதை தடுத்ததாகவும், தாவா கோவிலை சட்டத்திற்கு புறம்பாக 1ம் பிரதிவாதி தாவா கோவிலை தனது கட்டுப்பாட்டில் எடுப்பதற்காக மூடி வந்ததாகவும், எனவே இதுசம்பந்தமாக இந்த நம்பர் வாதி முத்துலெட்சுமி, ராஜாத்தி ஆகியோர் அறங்காவலர் என்ற அடிப்படையில் இந்த

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:30:38 +0530

நம்பர் 1ம் பிரதிவாதிக்கு எதிராக கடந்த 18.10.2013ம் தேதி காவல் ஆய்வாளர் இடத்தில் நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் கொடுத்ததாகவும், மேற்படி புகார் சம்பந்தமாக விசாரணைக்கு 1ம் பிரதிவாதியும் வாதி உள்பட இதர அறங்காவலர்களும் அழைக்கப்பட்டதாகவும், அதில் 1ம் பிரதிவாதி தாம் சட்டரீதியாக நீதிமன்றத்தை அணுகி உத்தரவு பெற்று வருவதாக சென்று விட்டதாகவும், இந்து சமய அறநிலையத்துறை சட்டம் 22/1959ன் படி பரம்பரை பூசாரி என்பது 1972ம் ஆண்டு முதல் ஒழிக்கப்பட்டுவிட்டதாகவும், எனவே, வாதியையும் தாவா கோவிலை நிர்வகிப்பதற்கு ஏதுவாக 1ம் பிரதிவாதிக்கு எதிராக தடை உத்தரவு பெற்று வருமாறு அறிவுறுத்தப்பட்டதாகவும், கடந்த 18.10.2013ம் தேதியில் கொடுக்கப்பட்ட புகார் மனுவிற்கு புகார் மனு ஏற்பு ரசீது வழங்கப்பட்டதாகவும், மேற்படி சுழற்சி முறையிலான பூசாரி என்பது ஒவ்வொரு தை மாதமும் பொங்கல் பண்டிகையின் போது முடிவடைவதாகவும், மேற்படி புகாருக்கு பின்னீடும் புல எண்.93/1ல் அடங்கிய தாவா கோவிலை 1ம் பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பாக கூட்டி வருவதாகவும், அதனால் இந்த நம்பர் 1ம் பிரதிவாதியின் மனைவியுமான அனுசியாவை தவிர இந்த நம்பர் வாதி மற்றும் இதர அறங்காவலர்கள் கோவிலுக்குள் சென்று வருவதை தடை செய்து வருவதாகவும், தொடர்ந்து தாவா கோவில் நிர்வாகத்திற்கு 1ம் பிரதிவாதி இடையூறு செய்து வருவதால் இந்த நம்பர் வாதி கோவிலால் அ.வ.எண்.181/2013 என்ற எண்ணில் மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருந்ததாகவும், மேற்படி அ.வ எண்.181/2013 வழக்கில் இந்த நம்பர் 1ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் தாவா மொத்த விஸ்தீரணமான 70 செண்டில் 40 செண்ட் பொறுத்து மேற்படி வாசு, சௌந்தரபாண்டியன், ஹரிராமமூர்த்தி மற்றும் இந்த நம்பர் 1ம் பிரதிவாதிக்கிடையில் பாகம் ஏற்படுத்திக்கொண்டதாகவும், அதில் 10 செண்ட் இந்த நம்பர் 1ம் பிரதிவாதி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டதாகவும், அதற்கு ஆதரவாக இந்த நம்பர் 1ம் பிரதிவாதி மேற்படி 05.03.1999ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை தாக்கல் செய்து மேற்படி வழக்கில் குறியீடு செய்துள்ளதாகவும், ஆனால் மேற்படி 1ம் பிரதிவாதியின் வாதம் நிராகரிக்கப்பட்டு மேற்படி அ.வ.எண்.181/2013 ஆனது வாதி கோவிலுக்கு ஆதரவாக முழுமையாக தீர்ப்பும், தீர்ப்பணையும் கடந்த 28.08.2015ம் தேதியில்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:30:43 +0530

பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி தீர்ப்பை அவமதிப்பது போல இந்த நம்பர் 1ம் பிரதிவாதி செயல்பட்டு வருவதாகவும், 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் வாடகைதாரர் ஆவார் என்றும், 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் வாடகைதாரராக தாவா சொத்தின் ஒரு பகுதியில் இருந்து வருவதாகவும், மேற்படி அ.வ.எண்.181/2013 முடிவுற்ற பின்னீடும் இந்த நம்பர் 1ம் பிரதிவாதி தாவா கோவிலில் அமைதியான அனுபவத்தையும், பாத்தியத்தையும் தடை செய்து வருவதாகவும், எனவே அதற்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 28.08.2015ம் தேதியிட்ட தீர்ப்பும், தீர்ப்பாணையையும் செயல்படுத்துவதற்கு ஏதுவாக போலீஸ் பாதுகாப்பு கோரி CRL.O.P.No.23625/2015 என்ற நம்பரில் மனுவும் தாக்கல் செய்து அதுவும் நிலுவையில் இருந்து வருவதாகவும், அ.வ.எண்.181/2013 கடந்த 28.08.2015ல் முடிவுற்றிருந்த நிலையில், இந்த நம்பர் 1ம் பிரதிவாதி மானாமதுரை வட்டாட்சியர் இடத்தில் தாவா மொத்த சொத்தான 70 செண்டில் 10 செண்டிற்கு தனது பேரில் வருவாய் ஆவணங்களை மாற்ற மனு செய்ததாகவும், மேற்படி 1ம் பிரதிவாதி கொடுத்த மனுவின் பேரில் மானாமதுரை வட்டாட்சியர் 1ம் பிரதிவாதி பெயரில் தாவா புல எண்.93/1ல் கண்ட மொத்த விஸ்தீரணம் 70 செண்டில் 10 செண்டை பொறுத்து பட்டா வழங்கியுள்ளதாகவும், பட்டா வழங்குவதற்கு முன்பாக மானாமதுரை வட்டாட்சியர் வாதி கோவில் இடத்தில் எவ்வித விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றும், இந்த நம்பர் 1ம் பிரதிவாதியும் கடந்த 28.08.2015ம் தேதியில் அ.வ.எண்.181/2013ல் ஏற்பட்ட உத்தரவை மறைத்துள்ளதாகவும், எனவே, வாதி கோவிலால் மாண்பமை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிப்பேராணை மனு எண்.21540/2016 என்ற நீதிப்பேராணை மனுவும் தாக்கல் செய்து அதில் 1ம் பிரதிவாதிக்கு பிரைவேட் நோட்டீஸ் உத்தரவாகியுள்ள நிலையில் பிரைவேட் நோட்டீஸும் சார்வு செய்யப்பட்டதாகவும், 28.08.2015ம் தேதியிட்ட அ.வ.எண்.181/2013ல் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பற்றியும் CRL.O.P.No.23625/2015 நிலுவையில் இருந்தது பற்றியும் தெரிந்திருந்தும், W.P.No.21540/2016ல் பிரைவேட் நோட்டீஸ் சார்வு செய்யப்பட்ட பின்னீடும் மேற்படி பிரைவேட் நோட்டீசை பெற்றுக்கொண்டும் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் 10 செண்டை பொறுத்து அவரது பாகத்திற்கு கடந்த 05.03.1999ம் தேதியிட்ட பாக பத்திரத்தின் வாயிலாக தனது பாகத்தில் ஒதுக்கப்பட்டதாக சொல்லி கொண்டும்,

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:30:48 +0530

வாடகைதாரர்கள் என்று சொல்லிக்கொண்டும் 1, 2 பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பான செயல்களை செய்து வந்ததாகவும், அதுமட்டுமல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக தாவா சொத்தில் இந்த நம்பர் 1ம் பிரதிவாதி கட்டிடம் கட்டி வந்ததாகவும், அதுதொடர்பாக 1ம் பிரதிவாதியை கடந்த 25.01.2016ம் தேதியில் வாதி அணுகி 28.08.2015ம் தேதியிட்ட தீர்ப்பை ஏற்று நடக்க அறிவுறுத்தியதாகவும், அதற்கு 1ம் பிரதிவாதி செவி மடுக்கவில்லை என்றும், வாதி கோவிலானது நிர்வாக அறங்காவலர் மூலமாக பிரதிவாதியை சட்டத்திற்கு புறம்பான செயல்களை செய்யாமல் இருக்க அறிவுறுத்திய நிலையில், 1ம் பிரதிவாதி அவரது ஆட்கள் மூலமாக அதனை எதிர்த்ததாகவும், எனவே அதற்கு எதிராக வாதி கோவிலால் கடந்த 25.11.2016ல் புகார் கொடுத்ததாகவும், அதற்கு புகார் மனு ஏற்பு ரசீது 707/2016 வழங்கியதாகவும், பிரதிவாதிகளுக்கு ஆள்பலமும், அரசியல் பலமும் உள்ளதாகவும், அதனால் காவல்துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், அதுமட்டுமல்லாமல் 1ம் பிரதிவாதியிடமிருந்து காவல்துறையினர் புகார் பெற்று இந்த வாதி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய போவதாக மிரட்டியதாகவும் வாதி தனது பிராதில் தெரிவித்துள்ளார். இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி கடந்த 05.03.1999ம் தேதியிட்ட போர்ஜரியான பாகப்பிரிவினை பத்திரத்தின் வாயிலாக தாவா சொத்தில் உரிமை கோரி வருவதாகவும், மேற்படி பாகப்பிரிவினை பத்திரமானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் வாதி கோவிலை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்றும், இந்து சமய அறநிலையத்துறை சட்டம் பிரிவு 109ன் கீழ் கோவில் சொத்துக்களை மீட்க சட்ட நடவடிக்கை எடுக்க எவ்வித கால அவகாசமும் கிடையாது என்றும், எனவே தாவா வழக்கு காலவரையறை சட்டத்திற்கு உட்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அதேபோல் 09.04.2010ம் தேதியிட்ட அரசிதழ் எண்.363ன் படி நிர்ணயிக்கப்பட்ட நீதிமன்ற கட்டணம் ரூ.100/– வாதி கோவிலால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிற்கு செலுத்தப்பட்டுள்ளதாகவும், தற்போது பிரதிவாதிகள் ஒருவருக்கொருவர் கூட்டாக இருந்துகொண்டு தாவா சொத்தில் அத்துமீறி பிரவேசித்து வருவதாகவும், 1ம் பிரதிவாதி தாவா மொத்த சொத்தான 70 செண்டில் 10 செண்ட் பொறுத்து உரிமை கோரி வருவதாகவும், அதில் 2ம் பிரதிவாதியோடு சேர்ந்துகொண்டு வீடு கட்டி வருவதாகவும், தாவா கோவில் சம்பந்தமாக சொத்துக்கள் பொறுத்து 1ம் பிரதிவாதி அவரது மனைவி அனுசியாவின் துணையோடு

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:30:52 +0530

வழக்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், மேற்படி அனுசியா அவருடைய கணவரான 1ம் பிரதிவாதியோடு சேர்ந்து மற்ற அறங்காவலர்களின் கையொப்பத்தை போர்ஜரியாக பயன்படுத்தி அ.வ.எண்.148/2009 என மானாமதுரை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததாகவும், மேற்படி வழக்கில் இந்த நம்பர் 1ம் பிரதிவாதி கோவிலுக்கு ஆஜரான வழக்கறிஞரின் பெயரை தவறாக பயன்படுத்தியதாகவும், அதுபற்றி தெரிய வரவே இந்த நம்பர் வாதியும் அவரது வழக்கறிஞரும் மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஆஜரானதாகவும், அது தெரிய வரவே உடனடியாக 1ம் பிரதிவாதியின் செயல் வெளிச்சத்திற்கு வருவது தெரிந்து மேற்படி அ.வ.எண்.148/2009 வழக்கை கடந்த 03.11.2014ம் தேதியில் இந்த நம்பர் 1ம் பிரதிவாதி அவரது மனைவி அனுசியா மூலம் வாபஸ் பெற்றதாகவும், எனவே வாதி தாவா வழக்கை விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>2)1ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:-</u> (மேற்படி 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை 2ம் பிரதிவாதியும் ஏற்றுக்கொள்வதாக மெமோ தாக்கல் செய்துள்ளார்)**

வாதியின் தரப்பில் தாக்கல் செய்துள்ள பிராதில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் யாவும் புரட்டு. இதில் ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை வாதியே கண்டிப்பாக ருசுப்படுத்த வேண்டும் என்றும், தாவா கோவில் தனிப்பட்ட கோவில். தனியார் கோவில் என்பது உண்மை என்றும், முதலில் பஸ் ஸ்டாண்டு இருந்து தற்போது 45 செண்டு மனைகரலாக உள்ளது என்று சொல்லியிருப்பதும் 1940ல் O.S.65/39 வழக்கு நடைபெற்று வந்ததாகக் கூறியிருப்பதும் அதன் மேல் A.S.No 7/41 சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றதாகக் கூறியிருப்பதும் O.A.No : 109/59 வழக்கு நடைபெற்றதாகக் கூறியிருப்பதும் அதனை வாதியே ருசுப்படுத்த வேண்டும் என்றும், பூசாரி தொழில் அக் கோவிலுக்கு வருடத்திற்கு ஒருமுறை சுழற்சி முறையில் செய்து வர வேண்டியது என்றும் உத்தரவு ஏற்பட்டதாகக் கூறியிருப்பதும் ஒப்புக் கொள்ளப்படுகிறதாகவும், 5.3.99ல் 40 செண்டை பொறுத்து ஆளுக்கு 10 செண்டு வீதம் பிரித்துக் கொண்டு அவரவர்கள் அனுபவம் செய்து வருவதாகக் கூறியிருப்பதும் உண்மை. கோயில் புல எண்.93/1ல் 70 செண்டு விஸ்தீரணத்தில் உள்ளது என்று

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:30:57 +0530

சொல்லியிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், 20.4.99 M.P.No: 2/92/C2 in A.P.No: 16/99 வழக்கு நடைபெற்றதாகவும் அதன் முடிவுகள் ஏற்பட்டதாகக் கூறியிருப்பதும் அதனை வாதியே கண்டிப்பாக ருசுப்படுத்த வேண்டும் என்றும், அதேபோல் O.S.No.119/2000 வழக்கிலும் அதன் பேரில் A.S.74/2004 வழக்கிலும் ஏற்பட்ட முடிவுகளும் அதன் உண்மை தன்மைகள் குறித்தும் ஆட்சேபிக்கப்படுகின்றன என்றும், இந்த 1ம் பிரதிவாதியின் மனைவி அனுசுயா என்பவரின் செயல்பாடு பற்றியும், அது சம்மந்தமாக இந்து அறநிலையத்துறையில் வாதி தரப்பில் மனு தாக்கல் செய்து, அதுவும் நிலுவையில் இருந்து வருகிறதாகவும், இந்த பிரதிவாதியின் மனைவி அனுசுயா நாளதுதேதி வரை டிரஸ்டி பொறுப்பில் இருந்து வருகிறதாகவும், பிரதிவாதி பசுமாட்டின் கழிவுநீர் மற்றும் அசுத்தம் நிறைந்த பொருட்களை போட்டு வைக்கிறார் என்றும், சட்டத்திற்கு புறம்பான முறையில் செயல்பட்டு வருகிறார் என்று கூறியிருப்பதும் ஒப்புக் கொள்ளப்படவில்லை மறுக்கப்படுகிறதாகவும், பூசாரி என்ற கோத்தாவில் வெளி நபரிடம் கோயில் பெயரில் நன்கொடை வாங்கியிருப்பதாக கூறியிருப்பதும் ஒப்புக் கொள்ளப்படவில்லை மறுக்கப்படுகிறது என்றும், இந்தப் பிரதிவாதி கோயிலுக்கு அதாவது டிரஸ்ட்டுக்கு பாதகமாக செயல்பட்டு வருகிறார் என்று கூறியிருப்பதும் ஒப்புக்கொள்ளப்படவில்லை மறுக்கப்படுகிறது என்றும், இந்தப் பிரதிவாதி மீது கடந்த 3.4.2013ல் திருப்புவனம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்ததாகவும், அதன் முடிவில் விசாரணை நடைபெற்று வந்ததாகவும் அதன் உண்மைத்தன்மைகள் ஆட்சேபிக்கப்படுகின்றன என்றும், O.S.181/2013 வழக்கில் இந்த 1ம் பிரதிவாதி மீது உறுத்துக்கட்டளை வழங்கியதாகவும் கூறியிருப்பதும் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்றும், அந்த தீர்ப்பின் பேரில் ஏற்பட்ட அப்பீல் நாளது தேதி வரை நிலுவையில் இருந்து வருகிறதாகவும், O.S.181/2013 வழக்கிலும் இந்த வாதியே பாகம் நடைபெற்றது என்று கூறியிருப்பதாகவும், அதன்பேரில் ஆளுக்கு 10 செண்டு வீதம் பிரித்து தனித்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் கூறியுள்ளார்கள் என்றும், இந்த 1ம் பிரதிவாதி ஏதோ போர்ஜரியாக பாகம் ஏற்படுத்திக் கொண்டதாகவும் அதனை வைத்து 1ம் பிரதிவாதி ஆக்கிரமித்து கட்டிடம் கட்டி வருவதாகக் கூறியிருப்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதில்லை என்றும், உண்மையில் புல எண்.93/1 மொத்த விஸ்தீரணம் 70 செண்டு

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:31:03 +0530

ஆகும். இதில் T.வாசு, சௌந்திரபாண்டியன், ஹரிராமமூர்த்தி மற்றும் இந்த 1ம் பிரதிவாதி பெயரில் பாகம் பெற்றுக் கொண்டு தலா 10 செண்டு பதிவு பாகமாக பிரித்துக் கொண்டு தனித்தனியே அனுபவம் செய்து வருகின்றனர் என்றும், ஆளுக்கு 10 செண்டு பிரித்துக் கொண்டதில் அவரவர்கள் தனித்தனியே வாடகைக்கு விட்டு வாடகையை வசூல் செய்து வருகிறார்கள் என்றும், அதேபோல் 1ம் பிரதிவாதிக்கு கிடைத்த 10 செண்டில் இந்த 2ம் பிரதிவாதிக்கு மர இழைப்பகம் வைப்பதற்காக வாடகைக்கு விட்டிருக்கிறார் என்றும், இந்த 2ம் பிரதிவாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் நிலச்சுவான்தார், வாடகைதாரர் என்ற உறவில் இருந்து வருகிறார்கள் என்றும், 1ம் பிரதிவாதிக்கு பாகத்தில் கிடைத்த சொத்தை தவிர வேறு ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்றும், பாகத்தில் கிடைத்த சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி பெயருக்கு 93/1பி என்ற சப்டிவிசனும் ஏற்பட்டு திருவேங்கடம் மகன் செல்வராஜ் பெயரில் பட்டா மாறுதலும் ஏற்பட்டுள்ளதாகவும், 1ம் பிரதிவாதிக்கும் மற்ற நபர்களுக்கும் பாகத்தில் கிடைத்த சொத்து தவிர மீதி 30 செண்டில் மட்டும் மொட்டையசுவாமி கோவில் உள்ளது என்றும், மேற்படி 30 செண்டில் கோவிலுடன்சேர்த்து 6 கடைகள் இந்த வாதியின் தனித்த அனுபவத்தில் இருந்து வருகிறதாகவும், 40 செண்டை பொறுத்து வாதியின் கணவருக்கும் கிடைத்துள்ளதாகவும், வாதியின் கணவர் மற்றும் இதர 2 சகோதரர்களும் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் ஆவார்கள் என்றும், மேற்படியார்களை இந்த வழக்கில் சேர்க்காததால் வழக்கும் Non Joinder of Neccessary Parties என்ற தோசத்திற்கு உள்ளாகிறதாகவும், வாதிக்கு வழக்கு தாக்கல் செய்ய எவ்வித உரிமையும் கிடையாது என்றும், இந்த பிரதிவாதியைப் பொறுத்து யாதொரு வழக்கு மூலங்களும் இல்லை என்றும், பிராதில் கூறியுள்ள வழக்கு மூலங்களும் தவறு என்றும், ஆகவே வாதியின் வழக்கை இந்த 1ம் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)1ம் பிரதிவாதி தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்:–**

இந்த 1ம் பிரதிவாதியால் ஏற்கனவே விரிவான எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், தாவா வழக்கில் வாதிகள் தரப்பில் சீர்திருத்த பிராதும், தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே இந்த 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் இந்த வாதியின் கணவர் மற்றும் அவரது சகோதரர் இருவரையும்

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.04.07 18:31:08 +0530

தாவா வழக்கில் சேர்க்காததால் தாவா வழக்கும் Non Joinder of Necessary Parties என்ற தோஷத்திற்கு உள்ளாகி இருப்பதாக ஏற்கனவே தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும், அதன்படி வாதியால் முத்துலெட்சுமி, லட்சுமிபிரியா, கணேஷ்வரி, சரண்யா ஆகிய நால்வரையும் 3 முதல் 6 வரை பிரதிவாதிகளாக சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு அதன்படி பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டு 3 முதல் 6 வரை பிரதிவாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், உண்மையில், 1ம் பிரதிவாதி தரப்பில் வாதி உய்யராணியின் கணவரான ஹரிராமமூர்த்தி மற்றும் அவரது உடன்பிறந்த மற்ற இரு சகோதரர்களான சௌந்தரபாண்டியன், இறந்து போன சகோதரர் வாசு என்பவரது வாரிசுகளை சேர்க்க வேண்டும் என சேர்கப்படாத நபர்களை சேர்க்க வேண்டி 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும், ஆனால் வாதி தரப்பில் வாசு என்பவரின் மனைவி மற்றும் வாரிசுகளை மட்டும் தரப்பினராக சேர்த்து விட்டு வாதியின் கணவர் ஹரிராமமூர்த்தியையும், சௌந்தரபாண்டியையும் சேர்க்கவில்லை என்றும், தாவா வழக்கானது வாதி தரப்பில் அருள்மிகு மொட்டையசாமி கோவில் மேனேஜிங் டிரஸ்டியாக இருந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், உண்மையில் தாவா வழக்குச் சொத்து சம்மந்தமாகவும், தாவா வழக்குச் சொத்தில் தென்வடலாக 23 ½ அடி அளவிலும், கிழமேலாக 26 ¼ அடி அளவிலும் மண்டப பகுதியிலும் அதேபோல் ஷை மண்டப பகுதிக்கு அடுத்து கிழக்கே 9 அடி அளவிலும் ஷை மொட்டைய சாமி கோவிலின் கட்டுமான அமைப்பு உள்ளதாகவும், ஷை அடி அளவுகள் நீங்கலாக மீதமுள்ள பகுதிகள் அனைத்தும் காலியிடமாகும் என்றும், மேற்கண்ட அடி அளவுகளின் விபரத்தையும் மொட்டையசாமி கோவில் அமைந்துள்ள கட்டுமான அளவுகளையும் பிராதில் வாதி தரப்பில் தெளிவாக குறிப்பிடாமல் 70 செண்ட் அளவிற்கு விஸ்தீரமுள்ள பகுதியாக சொத்து விபரத்தில் குறிப்பிட்டு பிராதும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே ஷை ஆலயம் உள்ளிட்ட இதர பகுதிகள் அனைத்தும் சோணையாசாமி கோவில் என்றே இருந்து வருகிறதாகவும், மேலும் செட்டில்மெண்டு கால அ பதிவேட்டில் புல எண்.93/1 என்பது மடம் என்றே குறிப்பிடப்பட்டு இருந்து வருகிறதாகவும், ஷை இரு ஆவணங்களிலும் மொட்டையசாமி கோவிலுக்கான இடம் என்று குறிப்பிடப்படவில்லை என்றும், ஷை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:31:14 +0530

மொட்டையசாமி கோவிலானது இந்த 1ம் பிரதிவாதியின் தந்தை திருவேங்கடம் செட்டியார் மற்றும் அவரது மூதாதையர் நினைவுக்கு எட்டாத காலம் வரை சுமார் 300 ஆண்டுகளுக்கும் மேலாகவே 1ம் பிரதிவாதியின் தந்தையார் காலம் தொட்டு பரம்பரை பரம்பரையாக தங்களது குடும்பத்திற்கான குலதெய்வமாக மொட்டையசாமியை வைத்து வழிபாடு செய்து வரப்படுகிறது என்றும், ஏற்கனவே ஷை ஆலயத்தின் டிரஸ்டிகள் நியமனம் சம்மந்தமாக இந்த 1ம் பிரதிவாதியின் மனைவியையும் சௌந்தரராஜன் மனைவி ராஜாத்தி, வாசு மனைவி முத்துலெட்சுமி, ஹரிராமமூர்த்தி மனைவி உய்யாராணி ஆகியோர்களை சுழற்சி முறையாக டிரஸ்டியாக இருந்து ஷை ஆலயத்தை நிர்வகித்து வருவதென கடந்த 2000ம் ஆண்டுவாக்கில் உதவி ஆணையர் இந்து சமய அறநிலையத்துறை அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டு அதன்படி மேற்கண்ட நால்வரும் டிரஸ்டிகளாக இருந்து ஷை ஆலயத்தை நிர்வகித்து வந்தனர் என்றும், இந்த 1ம் பிரதிவாதி மட்டும் யார் டிரஸ்டியாக இருந்தாலும் அவரது உடன்பிறந்த சகோதரர்கள் பூஜை கைங்கரியங்களை செய்து வராமல் விட்டு விட்ட படியால் எவ்வித சுழற்சி முறையும் இல்லாத முறையில் சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பூஜை கைங்கரியங்களை செய்து வருகிறார் என்றும், ஷை விபரங்கள் அனைத்தும் இந்த வாதிக்கு நன்கு தெரியும் என்றும், ஷை விபரங்களை மறைத்து இந்த வாதி பிராது தாக்கல் செய்துள்ளார் என்றும், ஏற்கனவே இந்த 1ம் பிரதிவாதியின் தந்தை திருவேங்கடம் செட்டியார் உயிருடன் இருந்த காலத்தில் ஷை ஆலயத்தின் அறங்காவலர் உரிமை மற்றும் நிர்வகிக்கும் பொறுப்பு மற்றும் ஆலயச் சொத்துக்களை பராமரிப்பது சம்மந்தமாக மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முதலேற்பு வழக்கு எண். 65/1939 என்ற வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 30.10.1940ம் தேதியில் ஷை ஆலயமும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத தனியார் ஆலயம் என தீர்ப்பும் ஏற்பட்டுள்ளதாகவும், அதன்மீது சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற மேல்முறையீட்டு வழக்கு எண் 7/1941 என்ற மேல்முறையீட்டில் 02.11.1942ல் கீழமை நீதிமன்ற தீர்ப்பும், தீர்ப்பாணையும் உறுதி செய்யப்பட்டு மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் ராமநாதபுரம் மாவட்டம். பரமக்குடியில் உள்ள இந்துசமய அறநிலையத்துறையின் ஆணையர் ஷை ஆலயத்தின் நிர்வாகத்தில் தலையிட முயன்ற போது இந்த 1ம் பிரதிவாதியின் தந்தை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:31:19 +0530

மற்றும் சேதுவேல் செட்டியார் இருவரும் சேர்ந்து இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சட்டம் 1959 பிரிவு 63 A ன் கீழ் OA.109/1959 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளனர் ஷை மனுவானது 30.08.1960ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், அச்சமயம் இந்த 1ம் பிரதிவாதியின் தந்தை பரம்பரை அறங்காவலராக இருந்தார் என இணை ஆணையர் அறிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இது முற்றிலும் தவறாகும் என்றும், மேற்கண்ட மனுவும் ஆலயம் தனிப்பட்ட கோவில் என விளம்புகை செய்யவே தாக்கல் செய்யப்பட்டதாகும் என்றும், ஷை ஆலயத்தின் பரம்பரை நிர்வாகம் குறித்த உத்தரவை பிறப்பிக்க இணை ஆணையருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என்றும், ஏற்கனவே நீதிமன்றத்தில் நிர்வாகம் சம்மந்தமாகவும், பரம்பரை அறங்காவலர் சம்மந்தமாகவும் தீர்வு காணப்பட்டநிலையில் ஷை தீர்ப்புக்கு முரணாக இணை ஆணையர் உத்தரவிட்டதும் சட்டத்திற்கு முரணானதாகும் என்றும், அதன்படியே மேற்படி ஆலயமும் பொதுக்கோவில்களைத் தான் அறநிலையத்துறையால் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமே தவிர தனியார் ஆலயங்களை எடுத்துக் கொள்ள எந்தவித உரிமையும் கிடையாது என்றும், அதுசம்மந்தமாக இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் நிர்வாகப் பதிவேட்டில் தனியார் ஆலயம் சம்மந்தமாகவும், பொது ஆலயங்கள் சம்மந்தமாகவும் வரையறுக்கப்பட்டுள்ளது என்றும், தனியார் ஆலயம் என்ற அடிப்படையில் திருவேங்கடம் செட்டியாருக்குப் பிறகு அவரது வாரிசுகளுக்கு மட்டுமே உரிமை இருந்து வருகிறதாகவும், ஏற்கனவே தவறுதலாக திருவேங்கடம் செட்டியாரின் மகன்களை டிரஸ்டியாக நியமித்து வழங்கப்பட்ட உத்தரவின் பேரில் முத்துலெட்சுமி மற்றும் அவரது கணவர் வாசு ஆகிய இருவரும் சேர்ந்து ஆலயத்திற்கு பாத்தியமான புல எண். 97/7ல் 29 சென்டை தனியாருக்கு 1983ம் வருடம் விற்பனை செய்து விட்டனர் என்றும், அதுசம்மந்தமாக ஏற்பட்ட பிரச்சனை சம்மந்தமாக இந்து சமய அறநிலையத்துறையை இந்த 1ம் பிரதிவாதி மற்றும் அவரது உடன்பிறந்த சகோதரர்கள் நாட வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும், அதன்பிறகு தவறுதலாக திருவேங்கடம் செட்டியாரின் மருமகள்களை டிரஸ்டியாக நியமித்து பரமக்குடி உதவி ஆணையரால் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், ஆலயம் இருந்து வரும் புலமும் திருவேங்கடம் செட்டியார் பெயரில் பட்டா பெயர் மாறுதல் ஏற்பட்டு ஷையாரின் ஆண்வாரிசுகளுக்குள்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:31:24 +0530

பாகப்பிரிவினை ஏற்பட்டு அதனடிப்படையில் அவரவர்கள் பெயருக்கு பட்டா பெயர் மாறுதலும் ஏற்பட்டு அவரவர்களால் தனித்தனியாக சுவாதீனமெடுத்து அனுபவம் செய்து வரும் நிலையில் இந்த 1ம் பிரதிவாதிக்குச் சேர வேண்டிய பாக ஈவினை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்தோடு இந்த வாதியின் தூண்டுதலின் பேரில் பரமக்குடி உதவி ஆணையரால் இந்த வாதி உய்யாராணியை டிரஸ்டியாக நியமித்து 28.03.2000–ம் தேதியில் ஒரு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி மோசடியான உத்தரவை வைத்துக்கொண்டு தாவா வழக்கும் இந்த 1ம் பிரதிவாதி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், ஏற்கனவே இந்த 1ம் பிரதிவாதி உள்ளிட்ட அவரது உடன்பிறந்த சகோதரர்களுக்குள் அவரது தாயார் மஞ்சக்காள் உயிருடன் இருந்த காலத்தில் 1998ம் ஆண்டு வாக்கில் வாய்மொழியாக புலஎண். 93/1–ல் பால்பண்ணை கட்டுமானம் இருந்து வருவதற்கு பின்புறம் சுமார் 2 செண்ட் அளவிற்கு இந்த 1ம் பிரதிவாதியை தனித்து குடியிருந்து கொள்ள இந்த வாதி உய்யராணியின் கணவர் ஹரிராமமூர்த்தியே நேரடியாக கூறியதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி புதிய கட்டுமானம் கட்டுவதற்கு லிண்டல் கட்டுமானம் வரை கட்டப்பட்டு இருந்து வருகிறது என்றும், மேற்படி கட்டுமானத்தை கட்டவிடாமல் தடுக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தில் வாதி உய்யாராணி தாவா வழக்கை தாக்கல் செய்ததோடு, காவல்நிலையத்தில் புகார் செய்து இந்த 1ம் பிரதிவாதிக்கு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி வீட்டை கட்டவிடாமல் தடுத்து நிறுத்தியுள்ளார் என்றும், ஏற்கனவே மேற்படி கட்டுமானம் கட்டும் இடத்தில் இருந்து வந்த தகர மேற்கூரை அமைப்பு கொண்ட வீட்டிற்கு திருப்புவனம் பேரூராட்சியில் இந்த 1ம் பிரதிவாதியின் பெயரில் வரிவிதிப்பும் ஏற்பட்டுள்ளது என்றும், மேலும் புல எண். 95ல் இருந்து வரும் ஓட்டு வீட்டை தாவா வழக்கில் கண்ட ஆலயத்திற்கு பாத்தியப்பட்ட இடம் என்று தவறுதலாக குறிப்பிட்டு தாவா வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஏற்கனவே தாவா வழக்கிடைச் சொத்தும் மற்றும் ஆலயம் சம்பந்தமாக இந்து அறநிலையத்துறையில் இந்த 1ம் பிரதிவாதியின் தந்தை திருவேங்கடம் செட்டியார் என்ற திருவன் பூசாரி என்பவரால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு மேற்படி நடவடிக்கைக்கான கோப்புகளும் இந்து சமய அறநிலையத்துறையில் இருந்து வருவதால் பரமக்குடியில் உள்ள இந்து சமய அறநிலையத்துறையின் உதவி ஆணையர் சிவகங்கையில் உள்ள இந்து சமய

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:31:28 +0530

அறநிலையத்துறையின் இணை ஆணையர் மற்றும் மேற்படியார்களின் உயர் அதிகாரியான சென்னையில் இருந்து வரும் இந்து சமய அறநிலையத்துறையின் ஆணையாளர் ஆகியோர்களை தாவா வழக்கில் வாதி தரப்பினர்களாக சேர்க்காமல் தாவா வழக்கும் தாக்கல் செய்துள்ளதால், தாவா வழக்கும் Non Joinder of Neccessary Parties எனும் உள்ளாகிறது என்றும், மேலும் மேற்படி இந்து சமய அறநிலையத்துறையின் உத்தரவின் அடிப்படையிலேயே தாவா வழக்கும் தாக்கல் செய்திருப்பதால் மேற்படியார்களும் தாவா வழக்கிற்கு அவசிய தரப்பினர்களாகிறார்கள் என்றும், ஏற்கனவே மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முதலேற்பு வழக்கு எண். 148/2009 என்ற வழக்கும் இந்த 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, பரம்பரை அறங்காவலர்களுக்குள் ஏற்பட்ட ஒற்றுமையின்மை காரணமாக மேற்படி வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்றும், மேலும் 30 செண்ட் நிலம் ஆலயத்திற்கு எனவும், மீதமுள்ள 40 செண்டை திருவேங்கடம் செட்டியாரின் வாரிசுகள் தங்களுக்குள் தலா 10 செண்ட் வீதம் பாகப்பிரிவினை செய்து கொண்டு அதன்படி இந்த 1ம் பிரதிவாதியும் இறந்துபோன வாசு மனைவி முத்துலெட்சுமி இருவராலும் தனித்தனியாக பட்டா மாற்றம் செய்யப்பட்டு பட்டாவும் பெறப்பட்டுள்ளது என்றும், மேற்படி வாசுவின் பாகத்தில் கிடைத்த இடத்தில் மேற்படி முத்துலெட்சுமி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றும், மேற்படி முத்துலெட்சுமியைப் பொறுத்து எவ்வித பரிகாரமும் கோராமலும், மேற்படி வாசுவிற்கு ஒதுக்கப்பட்ட பாக ஈவைப்பொறுத்து எவ்வித பரிகாரமும் கோராமலும் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இதிலிருந்தே 3ம் பிரதிவாதி முத்துலெட்சுமியும், வாதியும் Collusive ஆக இருந்து கொண்டு வேண்டுமென்றே இந்த 1ம் பிரதிவாதி மீது தாவா வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆகையால் வாதியின் வழக்கை இந்த 1ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>4)1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

இந்த பிரதிவாதிகளால் வெளிப்படையாக தனது எதிர்வழக்குரையிலும், கூடுதல் எதிர்வழக்குரையிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்களை தவிர இதர விஷயங்களை தவறு என மறுப்பதாகவும், இவ்வழக்கு, மொட்டையசுவாமி திருக்கோவில் என்ற பெயரில், அதன் நிர்வாக அறங்காவலர் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஒரு

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:31:33 +0530

திருக்கோவில் என்பது சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனிநபர் அல்ல என்றும், அது ஒரு சொத்தாகும் என்றும், மேற்படி இடமானது தபசு என்ற தவம் செய்வதற்கான இடம் ஆகும் என்றும், அது எந்தவகையிலும் கோவில் ஆகாது என்றும், செட்டில்மெண்ட் காலத்தில் வருவாய்துறை ஆவணங்களிலும் மொட்டையசாமி கோவிலுக்கான இடம் என்று குறிப்பிடப்படவில்லை என்றும், அந்த இடத்தில் இந்த பிரதிவாதியின் முன்னோரான பம்பையன் என்கிற ராவுத்தர் பூசாரி என்று அழைக்கப்பட்டவர் அருள்வாக்கு சொல்லி வந்துள்ளார் என்றும், அதனை பொதுமக்கள் கேட்டு வந்துள்ளனர் என்றும், அதனால் மடமானது பெயர் மருவி மொட்டையசாமி கோவில் என்று அழைக்கப்பட்டதாகவும், மடமானது எந்தகாலத்திலும் கோவில் என்ற பொருளுக்குள் வராது என்றும், மேற்படி மடத்தில் மேற்படி ராவுத்தர் பூசாரி தினந்தோறும் பூஜை செய்து வந்ததாகவும், அதனை மொட்டையசாமி மடம் என்று அழைப்பார்கள் என்றும், காலப்போக்கில் மேற்படி இடத்தில் ஸ்ரீவிநாயகர் கருப்பசாமி சிலைகளும் நிறுவப்பட்டதாகவும், அந்த சிலைகளுக்கு பூஜைகள் நடத்தப்பட்டதாகவும், எனவே மடமானது கோவில் என அழைக்கப்பட்டதாகவும், மடம் மற்றும் கோவில் என்ற இரண்டும் வெவ்வேறு இடமாகும் என்றும் எந்தகாலத்திலும் மடமானது கோவில் ஆகாது என்றும் 19ம் நூற்றாண்டின் இறுதியில் மேற்படி இடத்தில் மொட்டையசாமி முக்தி அடைந்ததாகவும், மேற்படி மடத்தில் மொட்டையசாமியின் சமாதி வைக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு பீடம் நிறுவப்பட்டு மொட்டையாசாமியின் கற்சிலை நிறுவப்பட்டதாகவும், அதற்கு பூஜைகள் நடைபெற்றதாகவும், அதனை காலப்போக்கில் மொட்டையசாமி வழிதோன்றல்களும் பக்தர்களும், வழிபட தொடங்கியதாகவும், மேற்படி இடத்தில் மொட்டையசாமியின் வழிதோன்றல்களான ராவுத்தர் பூசாரி வல்லத்திருவரசு பூசாரி ஆகியோரும் ஒன்றன் பின் ஒன்றாக முக்தி அடைந்ததாகவும், அவர்களுடைய சமாதிகளும் மேற்படி மடத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு பீடம் அமைக்கப்பட்டு அந்த பீடத்திற்கு பூஜைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், அதனை கோவில் என்று அழைக்கப்பட்டாலும் அது மடமாகும் என்றும், மடமாகவே தொடர்ந்து வருவதாகவும், மேற்படி மொட்டையசாமியும் அவர்களது வழிதோன்றல்களும் முக்தி அடைந்த பிறகு மேற்படி மடத்தை மொட்டையசாமியின் குடும்ப உறுப்பினர்கள் நிர்வகித்து வருவதாகவும், 1ம் பிரதிவாதி மேற்படி மொட்டையாசாமியின்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.04.07 18:31:38 +0530

வழிதோன்றல்களாக இருந்து மேற்படி மடத்தை நிர்வகித்தும் மடத்திற்கு பூஜை செய்து வருவதாகவும், அவருக்கு முன்னால் அவருடைய தகப்பனார் திருவேங்கடம் என்கிற திருவன் பூசாரி மேற்படி மடத்தை நிர்வகித்து வந்து பூஜை செய்து வந்ததாகவும், மேற்படி மடமானது மொட்டையாசாமி மற்றும் அவர்களது வழிதோன்றல்களின் சமாதி ஆகும் என்றும், சமாதி என்பது இந்து சமய அறநிலையத்துறை சட்டத்திற்கு அப்பாற்பட்டது என்றும், இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தின் படி சமாதி என்பதை கட்டுப்படுத்த முடியாது என்றும், இந்து சமய அறநிலையத்துறையால் உத்தரவுகள் போடப்பட்டுள்ளதாகவும், அந்த உத்தரவின் அடிப்படையில் ஒரு சில பரிகாரங்கள் பிராதில் கோரப்பட்டுள்ளதும், நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், மேற்படி செல்லாத உத்தரவின் அடிப்படையில் எந்தவொரு உரிமையும் கோர இயலாது என்றும், வாதிக்கு வழக்குமூலம் இல்லை என்றும், சட்டத்தால் அங்கீகரிக்கப்படாத நபரால் தாக்கல் செய்யப்படும் வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், அதை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது என்றும், எனவே வாதியின் வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>5) 1, 2 பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

வாதியின் தாவா பிராதில் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கக்கூடியதில்லை என்றும், இதனடியில் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர பிற ஏனைய சங்கதிகள் யாவும் பொய் என்று மறுக்கப்படுவதுடன் அவைகள் யாவற்றையும் வாதியே கண்டிப்பாய் ருசுப்படுத்த வேண்டும் என்றும், வாதி தனது பிராது பாரா2ல் கடைசி வரியிலும் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள பல வழக்குகளிலும் வாதியின் கோயிலான அருள்மிகு மொட்டையசாமி கோயில் என்பது தனியார் கோயில் என்று தெளிவாக ஒப்புக்கொண்ட நிலையில் இந்த வழக்கிற்கு தேவையில்லாத நபரான இந்து சமய அறநிலையத்துறையை வழக்கில் 7ம் பிரதிவாதியாக சேர்த்திருப்பது தேவையற்ற கட்சிக்காரரை சேர்த்துள்ள (MIS JOINDER OF PARTIES) என்ற தோஷத்திற்கு உள்ளாகின்றது என்றும், இந்த வழக்கின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு வாதி இந்த அசல் வழக்கில் 7ம்பிரதிவாதியாக சேர்த்திருக்கும் இந்து சமய அறநிலையத்துறை தேவையற்ற கட்சிக்காரர் என்றும், வாதி தனது பிராதில் கூறியுள்ள

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:31:42 +0530

05.03.1999ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்ட தரப்பினர்கள் அனைவரும் தனக்கு சம்பந்தமில்லாத நபர்கள் என்பது போன்று தனக்கும் அந்த நபர்களுக்கும் எவ்விதமான உறவுமில்லாதது போன்று இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், உண்மையில், மேற்படி பாகபத்திரத்தின் தரப்பினர்கள் இந்த வாதியின் கணவர் ஹரிராமமூர்த்தி என்பவரும் கணவரின் உடன் பிறந்த சகோதரர்களுமே என்றும், எனவே இந்த வழக்கும் வாதியால் உண்மையை சமூகம் நீதிமன்றத்தில் மறைத்து (SUPPERESION OF FACTS) தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதி தனது பிராதில் 05.03.1999ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை செல்லத்தக்கதில்லை (NULL AND VOID) என்று விளம்புகை பரிகாரம் கோரும் நிலையில் மேற்படி பாகபிரிவினை ஆவணத்தின் தரப்பினர்கள் அனைவரையும் இந்த வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்த்திடாமல் வேண்டுமென்றே பாகப்பிரிவினை ஆவணத்தினை எழுதிய சகோதரர்களுக்குள் வாதி தனது கணவர் ஹரிராமமூர்த்தி என்பவரையும் மற்றொரு சகோதரரான சௌந்தரபாண்டியன் என்பவரையும் இந்த வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்த்திடவில்லை என்றும், எனவே வழக்கும் அவசியமான கட்சிக்காரர்களை சேர்க்கவில்லை என்ற (NON JOINDER OF NECESSARY PARTIES ) தோஷத்திற்கு உள்ளாகின்றது என்றும், வாதி இந்த அசல் வழக்கு பிராது பாரா2ல் கடைசி வரியிலும், ஏற்கனவே தாக்கல் செய்துள்ள பல வழக்குகளிலும் வாதியின் கோயிலான அருள்மிகு மொட்டையசாமி கோயில் என்பது தனியார் கோயில் என்று தெளிவாக ஒப்புக்கொண்ட நிலையில் தாவாசொத்தினை குறைவாக மதிப்பிட்டு நீதிமன்ற கட்டணத்தினை தவறாக செலுத்தியுள்ளனர் என்றும், அதனடிப்படையிலும் இந்த வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதில்லை என்றும், 05.03.1999ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின்படி பாகம் பிரிக்கப்பட்டு அவரவர் பாகத்தை அவரவர் அனுபவித்து வருகின்றனர் என்றும், அதனடிப்படையில் வழக்கிற்கு முன்னதாகவே உட்பிரிவுகளும் செய்யபட்டுள்ளதாகவும், ஆகையால் வாதிகளின் பொய்யான வழக்கை 1—ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:31:47 +0530

**6) 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்**

இந்த எதிர்வாதிகளால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்களை தவிர பிராதில் கண்ட இதர விஷயங்கள் சரியானதல்ல என்றும், தாவா வழக்கு ஆதியில் இந்த நம்பர் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக மட்டும் விளம்புகை மற்றும் அதன் பின் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னீடு 3 முதல் 6 பிரதிவாதிகள் இடைநிலை மனு எண்.85/2018ன் பிரகாரம் பிராது திருத்தல் மனு மூலம் சேர்க்கப்பட்டதாகவும், 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் அறங்காவலர்கள் என்ற அடிப்படையில் உரிமை உள்ளதாகவும், இந்த கோவில் டிரஸ்டை உருவாக்கிய திருவேங்கடம் என்பவர் தனியார் டிரஸ்டாக தாவா கோவில் டிரஸ்டை அவருடைய வாழ்நாளில் ஏற்படுத்தியும், அவருடைய காலத்திற்கு பின்னர் பரம்பரை அறங்காவலர்களாக அவரது மகன்களான வாசு, சௌந்தரபாண்டியன், செல்வராஜ், ஹரிராமமூர்த்தி வந்ததாகவும், மேற்படி வாசுவின் வாரிசுகள் தான் இந்த நம்பர் 3 முதல் 6 பிரதிவாதிகள் என்றும், வாதி ஆனவர் மேற்படி ஹரிராமமூர்த்தியின் மனைவி ஆவார் என்றும், மேற்படி பரம்பரை அறங்காவலர் என்பதை இந்து சமய அறநிலையத்துறை உத்தரவு எண்.ப.மு.8176/99 மூலம் கடந்த 27.03.2000ம் தேதியில் உறுதி செய்யப்பட்டதாகவும், அந்த உத்தரவு அனைத்து அறங்காவலர்களையும் கட்டுப்படுத்தக்கூடியது என்றும், பிராது பத்தி 3 முதல் 5 வரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது என்றும், இந்த நம்பர் பிரதிவாதிகளால் ஒத்துக்கொள்ளப்படுவதாகவும், பிராது பத்தி 6ல் கண்ட சங்கதிகள் தவறு என்று ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், குடும்ப ஏற்பாடானது கடந்த 05.03.1999ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் ஏற்படுத்தப்பட்டதாகவும், அதன் படி அனைத்து வாரிசுதாரர்களும் தாவா சொத்தின் உரிமையாளர்கள் ஆவார்கள் என்றும், பிராதில் கண்ட தாவா கோவில் சொத்தில் அனைத்து பரம்பரை அறங்காவலர்களுக்கும் சம உரிமை உள்ளது என்றும், மேற்படி பிராது பாரா 10ல் கண்ட சங்கதிகள் தவறு என்றும், அதாவது இந்த நம்பர் 3 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்தில் எப்போதும் முழு உரிமை கோரியதில்லை என்றும், தாவா சொத்தை 3ம் நபருக்கு மாற்றவோ, தாவா சொத்தின் மீது ஜார்ஜ் ஏற்படுத்தவோ அடமானம் வைக்கவோ உரிமை இல்லை என்றும், மேற்படி பாகப்பிரிவினை மூலம் உரிமை மாற்றம் என்பது

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:31:52 +0530

ஒரு Possessory title மட்டுமே தவிர அதனால் டிரஸ்ட் விதிகளை மீறியதாக ஆகிவிடாது என்றும், மேற்படி டிரஸ்டி விதிகளை மீறியதாக பிராதில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறு என்றும், பிராது பத்தி 8ல் சொல்லியுள்ள விஷயங்கள் பற்றி இந்த நம்பர் 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றும், பிராது பத்தி 9ல் கண்ட சங்கதிகள் சரியானது என்றும் ஒப்புக்கொள்ளப்படுவதாகவும், பிரைவேட் டிரஸ்ட் என்று சொல்லப்பட்ட தாவா சொத்தை 1ம் பிரதிவாதி அவருடைய சொந்த உபயோகத்திற்காக பயன்படுத்தி வருவதாகவும், பிராது பத்தி 10ல் கண்ட சங்கதிகள் சரியானது என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பிராது பாரா 11 முதல் 22ல் கண்ட சங்கதிகளை ஒப்புக்கொள்வதாகவும், 1, 2 பிரதிவாதிகள் டிரஸ்ட் விதிகளை மீறியதாகவும், தாவா கோவில் சொத்துக்கு எதிராக செயல்பட்டு தாவா கோவில் சொத்தை தவறுதலாக 1, 2 பிரதிவாதிகள் பயன்படுத்தி வருவது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், எனவே 1ம் பிரதிவாதி பரம்பரை அறங்காவலரில் இருந்து நீக்கப்பட்டதாகவும், டிரஸ்ட்க்கு சொந்தமான சொத்தை பயன்படுத்துவதிலிருந்து தடைப்பட்டுள்ளார் என்றும், பிராதில் கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது 1, 2 பிரதிவாதிகள் பொறுத்து மட்டும் கேட்டுள்ளதாகவும், தாவா சொத்தில் வாதியை போலவே 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் பரம்பரை அறங்காவலர் என்ற அடிப்படையில் சம உரிமை உள்ளது என்றும், எனவே பிராதில் கோரியுள்ள பரிகாரங்களை 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கக்கோரியும், அதே சமயம் 3 முதல் 6 பிரதிவாதிகள் பரம்பரை அறங்காவலர்கள் என்பதை உறுதி செய்யவும் இந்த 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

**7) 7ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்**

இந்த நம்பர் பிரதிவாதியால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்களை தவிர இதர விஷயங்கள் தவறு என்றும், அதனை வாதியே கண்டிப்பாய் ருசிப்படுத்த வேண்டும் என்றும், தாவா வாதி கோவிலானது இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் வருவதாகவும், எனவே வாதியோடு சேர்ந்து தாவா கோவில் சொத்தை மீட்க இந்த பிரதிவாதி சேர்ந்துள்ளதாகவும், பிராது பத்தி பாரா 1 முதல் 3ல் கண்ட சங்கதிகளில் சொல்லியுள்ள நீதிமன்ற நடவடிக்கைகளை ஒப்புக்கொள்வதாகவும், பிராது பாரா 4ல் சொல்லியுள்ள சுழற்சி முறையில் பூஜைகள்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:31:56 +0530

செய்து வந்ததாக சொல்லியிருப்பது இந்த பிரதிவாதிக்கு தெரியாது என்றும் மேற்படி சுழற்சி முறை என்பது வாதி குடும்பத்தார்க்குள் ஏற்படுத்திக்கொண்டது என்றும், பிராது பாரா 5ல் புல எண்.97/7 சொத்து சம்பந்தமாக முன்னாள் அறங்காவலர்கள் தவறாக பயன்படுத்தியது சம்பந்தமாக அவர்களை அறங்காவலர் பொறுப்பிலிருந்து நீக்கியது தொடர்பாக சொல்லியுள்ள சங்கதிகளை ஒப்புக்கொள்வதாகவும், அதேபோல் இந்த நம்பர் வாதியான நிர்வாக அறங்காவலர் உள்பட நான்கு பேரை அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டதை ஒப்புக்கொள்வதாகவும், அதில் இந்த வாதி உய்யாராணியை நிர்வாக அறங்காவலராக நியமனம் செய்யப்பட்டதை 7ம் பிரதிவாதி இந்து சமய அறநிலையத்துறை அங்கீகரித்துள்ளதாகவும், பிராது பத்தி 6ல் சொல்லியுள்ள 05.03.1999ம் தேதியிட்ட போர்ஜரியான பாகப்பிரிவினை பத்திரம் குறித்து இந்த 7ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றும், தாவா தாக்கல் செய்ததற்கு பின்னர் தான் மேற்படி விபரம் 7ம் பிரதிவாதி அலுவலகத்திற்கு தெரிய வந்ததாகவும், தற்போதைய அறங்காவலருக்கு கோவில் சொத்துக்களை சுவாதீனம் எடுக்க உரிமை உள்ளது என்றும், 7ம் பிரதிவாதி அலுவலகத்தில் பராமரித்து வரும் கோவில் சொத்து பதிவேட்டில் தாவா சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், பிராது பத்தி 7ல் சொல்லியுள்ள விஷயங்கள் அனைத்தும் முன்னாள் அறங்காவலர்கள் செய்த சட்டத்திற்கு புறம்பான செயல்கள் என்றும், அவர்கள் தாவா கோவில் சொத்தை அபகரிப்பதற்காக அவ்வாறு செய்துள்ளனர் என்று சொல்லியுள்ளதை ஒப்புக்கொள்வதாகவும், பிராது பாரா 8ல் சொல்லியுள்ள சங்கதிகளான நீதிமன்ற முன் நடவடிக்கைகளை ஒப்புக்கொள்வதகாவும், பிராது பத்தி 9ல் சொல்லியுள்ள சங்கதிகளான 28.05.2008ம் தேதியிட்ட வழக்கறிஞர் சட்ட அறிவிப்பு பற்றி இந்த பிரதிவாதிக்கு தெரியாது என்றும், ஆனால் மேலே சொன்னவாறு தற்போதைய நிர்வாக அறங்காவலரான இந்த வாதிக்கு கோவில் சொத்துக்களை சுவாதீனம் எடுக்க உரிமை உள்ளது என்றும், பிராது பத்தி 10ல் சொல்லியுள்ள அறங்காவலர்களில் ஒருவரான அனுசியா அறங்காவலர் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்பதால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதை ஒப்புக்கொள்வதாகவும், பாரா 11, 12ல் சொல்லியுள்ள சங்கதிகளான தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து வீடு கட்டியுள்ளதாக சொல்லியுள்ளது ஒப்புக்கொள்வதாகவும், ஆனால் வாதி எடுத்த முயற்சியால் 1ம்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:32:01 +0530

பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட பட்டா மாண்பமை உயர்நீதிமன்ற கிளையின் உத்தரவின் மூலம் ரத்து செய்யப்பட்டதாகவும், அதேபோல் 1ம் பிரதிவாதியை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற இந்து சமய அறநிலையத்துறை சட்டம் பிரிவு 78ன் கீழ் இந்த பிரதிவாதி அலுவலகத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், பாரா 16 முதல் 18ல் சொல்லியுள்ள அ.வ.எண்181/2013ல் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்றும், மேற்படி W.P.No.21540/2016 வாதி கோவிலுக்கு ஆதரவாக தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், 1ம் பிரதிவாதி புல எண்.93/1ல் 10 செண்ட் நிலம் அவருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளது தவறு என்றும், மேற்படி சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்டதாகும் என்றும், தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியமுடையது என்று சொல்லியுள்ளது தவறானது என்றும், ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், அ.வ.எண்.148/2009 நடவடிக்கை பொறுத்து இந்த பிரதிவாதிக்கு எதுவும் தெரியாது என்றும், ஆனால் இந்த 1ம் பிரதிவாதி தொடர்ந்து கோவில் சொத்துக்களை அபகரிக்க முயற்சிகள் செய்து வருவதகாவும், மேலே சொல்லப்பட்டவாறு தாவா சொத்து வாதி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றும், எனவே பிராதில் சொல்லியுள்ள சங்கதிகளின் படி உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியம் என்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8) வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் சுருக்கம்** (Reply Statement)

இந்த பதிலுரையில் இந்த நம்பர் வாதியால் வெளிப்படையாக ஒத்துக்கொள்ளப்பட்ட விஷயங்களை தவிர இதர விஷயங்களை பிரதிவாதிகளே நிரூபிக்க வேண்டும் என்றும், பிராதில் சொல்லியுள்ள சங்கதிகளை பிரதிவாதிகள் மறுப்பதிலிருந்து அவருடைய தவறான எண்ணம் தெரிய வருவதாகவும், எதிர்வழக்குரையில் பத்தி 2ல் அருள்மிகு மொட்டையசாமி கோவிலானது சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்ல என்றும், எனவே தாக்கல் வழக்கானது நிலைநிற்கத்தக்கதல்ல என்று சொல்லியுள்ளது தவறானது என்றும், பிரதிவாதிகளே நிரூபிக்க வேண்டும் என்றும், பாரா 3 முதல் 8ல் சொல்லியுள்ள சங்கதிகள் கட்டுக்கதைகள் என்றும் அதனை பிரதிவாதிகளே நிரூபிக்க வேண்டும் என்றும், இந்த நம்பர் 1ம் பிரதிவாதி முந்தைய வழக்கு நடவடிக்கையில் தரப்பினர் ஆவார் என்றும், எனவே மேற்படி வழக்கு நடவடிக்கையில் இருந்து இந்த வழக்கு நடவடிக்கையில்

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.04.07 18:32:06 +0530

மாற்றி கட்சி செய்ய தடைப்பட்டுள்ளார் என்றும் முந்தைய வழக்கு நடவடிக்கையில் இந்த நம்பர் 1ம் பிரதிவாதி எந்த இடத்திலும் தாவா சொத்தை கோவில் அல்ல என்று சொல்லவில்லை என்றும், அதனை மடம் என்றோ, சமாதி என்றோ சொல்லவில்லை என்றும், எனவே எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள மேற்கண்ட சங்கதிகள் கட்டுக்கதைகள் என்றும், பிரதிவாதிகளே அதனை சட்டப்படி நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும் மேற்படி கட்சியை 2ம் பிரதிவாதியான வாடகைதாரர் எடுக்க தடைப்பட்டுள்ளார் என்றும், முந்தைய வழக்கு நடவடிக்கையில் 1ம் பிரதிவாதியும் அவரது மூதாதையர்களும் செய்த கட்சியிலிருந்து மாறுபட்டு கட்சி செய்து வருவதாகவும், இந்த நம்பர் வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் மூதாதையர்கள் முந்தைய வழக்கு நடவடிக்கைகளிலும் இந்து சமய அறநிலையத்துறையில் நடைபெற்ற விசாரணை நடவடிக்கைகளிலும் தரப்பினர்கள் ஆவார்கள் என்றும், தாவா கோவிலானது Public Temple என ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அதிலுள்ள அறங்காவலர் பொறுப்பானது பரம்பரை அறங்காவலர்களாக இருந்து வருவதாகவும், எனவே அதிலிருந்து மாறுபட்டு கட்சி செய்ய 1ம் பிரதிவாதி தடைப்பட்டுள்ளார் என்றும், எனவே இந்து சமய அறநிலையத்துறையின் உத்தரவுகள் செல்லாது என சொல்லியுள்ளது கட்டுக்கதையே தவிர அதனை நிரூபிக்கும் சுமை பிரதிவாதியையே சேரும் என்றும், வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என சொல்லியுள்ள கட்சி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், எனவே வாதி கோரியுள்ள பரிகாரத்தின் படி தீர்ப்பும் தீர்ப்பாணையும் வழங்கிடக் கோரி பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>9) எழுவினாக்கள்:–</u>**

வாதியின் வழக்குரை மற்றும் பிரதிவாதி எதிர்வழக்குரை மற்றும் வாதியின் Reply Statement மற்றும் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

1) வாதி அருள்மிகு மொட்டையசுவாமி திருக்கோவில் திருப்புவனம் புதூர் என்பதன் மேனெஜிங் டிரஸ்ட்டி என்பது சரிதானா?

2) சர்வே எண்.93/1ல் கட்டுப்பட்ட 70 செண்ட் இடமானது வாதி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பது சரியா?

3) பிரதிவாதி சொல்வது போல் தாவா சொத்தானது தேவையான தரப்பினரை சேர்க்காத தோஷத்திற்கு உள்ளாகிறது என்பது சரியா?

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:32:13 +0530

4)வாதி கோரும் விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

5) வாதி கோரும் உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

6)வாதிக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரம் என்ன?

**10) கூடுதல் எழுவினாக்கள்**

1.இவ்வழக்கு HR&CE Act ஆல் தடை செய்யப்பட்டுள்ளதா?

2.இவ்வழக்கில் தேவையற்ற தரப்பினரை சேர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது உண்மையா?

3.வாதி 05.03.1999ம் தேதியிட்ட ஆவண எண்.351/99ஐ பொறுத்து கோரும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

4.வாதி கோரும் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது, வில்லங்கம் செய்யக்கூடாது என்று கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

5.அனுசுயா உதவியுடன் 1ம் பிரதிவாதி இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

11) இருபுறமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

12) வாதி தரப்பில் வாதி கோவிலின் நிர்வாக அறங்காவலர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.47 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பின்னர், வாதி தரப்பில் கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.ஆ.48 முதல் வா.சா.ஆ.52 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அதன் பின்னர் 1ம் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்யும் போது வா.சா.ஆ.53 மற்றும் வா.சா.ஆ.54 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பின்னர் மீண்டும் வாதி தரப்பில் கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.ஆ.55 முதல் 62 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதியை குறுக்கு விசாரணை செய்யும் போது பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் பி.வா.சா.1 தனது தரப்பு சாட்சியத்தின் போது பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.25

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:32:18 +0530

வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித சாட்சியமோ சான்றாவணங்களோ முன்னிடப்படவில்லை.

13) இவ்வழக்கில் வாதி தரப்பில் ஆதியில் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக மட்டும் வழக்கு தாக்கல் செய்திருந்த நிலையில், பின்னீடு 3 முதல் 6 பிரதிவாதிகளும் 7ம் பிரதிவாதியும் முறையே தனித்தனியாக வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டு கூடுதல் எதிர்வழக்குரைகளும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வாதி இந்த தாவாவை விளம்புகை பரிகாரங்கள் கோரியும், உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும், பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளனர். இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்ட போதிலும், வழக்கு விசாரணை முடிந்த பின்னீடு அவரது தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் எடுத்துவைக்காத நிலையில் அவருக்கு நீதிமன்றத்தில் இருந்து நோட்டீஸ் சார்வு செய்யப்பட்ட பின்னீடும், அவர் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் எடுத்துவைக்கப்படாததால் அவர் தரப்பு வாதுரை முடித்துவைக்கப்பட்டது.

14) வழக்கில் தீர்மானிக்க வேண்டிய விஷயங்களின் அடிப்படையில் வனையப்பட்ட எழுவினாக்களின் வரிசைகள் மாற்றி பதிலளிக்க வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>15) எழுவினா–1</u>**

வாதி அருள்மிகு மொட்டையசாமி திருக்கோவில் திருப்புவனம் புதூர் என்பதன் மேனேஜிங் டிரஸ்டி என்பது சரிதானா என்பதை தீர்மானிக்க வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அந்த வகையில் வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் O.A No.109/59ல் கடந்த 30.08.1960ம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணையர் மதுரை அவர்கள் பிறப்பித்த உத்தரவின் சான்றிட்ட நகல் என்பதை அறிய முடிகிறது. மேற்படி உத்தரவினை பரிசீலனை செய்த வகையில் தாவா கோவிலை Private Temple என அறிவிக்கக்கோரி திருவேங்கடம் செட்டியார் என்கிற திருவண்பூசாரியும், சேதுவேல்செட்டியாரும் மனு செய்ததில் மேற்படி மனுதாரர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு Private Temple என்ற கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், மேற்படி திருவேங்கடம் செட்டியார் மற்றும் சேதுவேல்செட்டியார் ஆகியோர்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:32:23 +0530

பரம்பரை அறங்காவலர்களாக மேற்படி மொட்டையசாமி கோவிலுக்கு நியமித்து உத்தரவிடப்பட்டது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், இந்த நம்பர் வாதி கோவிலின் நிர்வாக அறங்காவலராக உய்யாராணி இதர அறங்காவலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேற்படி வா.சா.ஆ.5 ஆவணத்தின் அடிப்படையில் இந்த நம்பர் வாதியான உய்யாராணி வாதி கோவிலின் நிர்வாக அறங்காவலர் என்பது நிரூபணம் ஆகியுள்ளதால் எழுவினா –1 வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

<u>16) எழுவினா–3</u>

தாவா வழக்கானது தேவையான தரப்பினரை சேர்க்காத தோஷத்திற்கு உள்ளாகிறது என்பது சரியா என்பதை தீர்மானிக்க வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இவ்வழக்கில் வாதி தரப்பில் கடந்த 05.03.1999ம் தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தை செல்லாது (Null and void) என்ற விளம்புகை பரிகாரம் கோரியுள்ள நிலையில், மேற்படி தாவா சொத்தான புல எண்.93/1ல் அடங்கிய 70 செண்டில் 40 செண்டை இந்த வாதி கோவிலின் நிர்வாக அறங்காவலரான உய்யாராணியின் கணவர் ஹரிராமமூர்த்தி உள்பட அவரது சகோதரர்களான தி.வாசு, சௌந்தரபாண்டியன், இந்த நம்பர் 1ம் பிரதிவாதி செல்வராஜ் ஆகியோர் தலா 10 செண்ட் வீதம் தங்களுக்குள் பாகம் செய்துக்கொண்டனர் என்பதை அறிய முடிகிறது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆகவும், வா.சா.ஆ.49 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் திருவேங்கடம் செட்டியாரின் மகன்களான தி.வாசு, ஹரிராமமூர்த்தி, சௌந்தரபாண்டியன், செல்வராஜ் ஆகியோர் தரப்பினராக உள்ளனர் என்பதை அறிய முடிகிறது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்ட நால்வரில் இந்த வாதி கோவிலின் நிர்வாக அறங்காவலரான உய்யாராணியின் கணவர் ஹரிராமமூர்த்தியையும், சௌந்தரபாண்டியன் என்பவரையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்பதை வழக்கு கோப்பினை பரிசீலனை செய்த வகையில் அறிய முடிகிறது. வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1 தனது சாட்சியத்தில் இந்த நம்பர்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:32:27 +0530

1ம் பிரதிவாதியும், 3 முதல் 6 பிரதிவாதிகளான வாசுவின் வாரிசுகள் மட்டுமே பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் பட்டா மாற்றி இருப்பதாகவும், எனவே அவர்களை மட்டும் தரப்பினராக சேர்த்திருப்பதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். உண்மையில், ஒரு சொத்தின் உரிமைமூல மாற்றமானது பத்திரத்தின் வாயிலாகவே மாறுகிறதே தவிர வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் எவ்வித உரிமை மாற்றமும் ஏற்படபோவதில்லை என்ற நிலையில், இவ்வழக்கில் தாவா சொத்தில் கண்ட 70 செண்டில் 40 செண்ட் விஸ்தீரணத்தை பொறுத்து திருவேங்கடம் செட்டியாரின் வாரிசுகள் அனைவரும் பாகம் ஏற்படுத்தி கொண்டுள்ளதால் இந்த வழக்கிற்கு மேற்படி நால்வரும் அவசிய தரப்பினராகின்றனர். இந்த நிலையில், வாசுவின் வாரிசுகளையும், செல்வராஜை மட்டுமே வழக்கில் தரப்பினராக சேர்த்து விட்டு ஹரிராமமூர்த்தியையும், சௌந்தரபாண்டியனையும் வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு Non Joinder of neccessary parties என்ற தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**17)கூடுதல் எழுவினா –2**

இவ்வழக்கில் தேவையற்ற தரப்பினரை சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் Mis–Joinder of parties என்ற தோஷத்தால் பாதிப்படைந்துள்ளதா என்பதை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கில் இந்து சமய அறநிலையத்துறையை தேவையற்ற தரப்பினராக சேர்த்துள்ளதாக பிரதிவாதிகள் தரப்பில் கட்சி செய்துள்ளனர். ஆனால் தாவா சொத்தை பொறுத்தும் தாவா கோவில் சொத்துக்களை நிர்வகிப்பது தொடர்பாகவும் பல்வேறு உத்தரவுகளை இந்து சமய அறநிலையத்துறை பிறப்பித்துள்ளதால் அவர்களை வழக்கில் சேர்த்துள்ளது சரியே என்றும், தேவையற்ற தரப்பினர்களை சேர்த்துள்ளதால் இவ்வழக்கு பாதிப்படைந்துள்ளதாக சொல்லியுள்ள பிரதிவாதிகளின் கூற்று ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்று கூடுதல் எழுவினா–3 பிரதிவாதிகளுக்கு எதிராக தீர்மானிக்கப்படுகிறது. _

**18) கூடுதல் எழுவினா–3**

வாதி 05.03.1999ம் தேதியிட்ட ஆவண எண்.351/99 ஐ பொறுத்து கோரும் Null and Void என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா என்பதை தீர்மானிக்க காலவரையறை சட்டம் பொருந்துமா என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டியது

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:32:32 +0530

அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்படி பரிகாரத்திற்கு கோவில் சொத்துக்களை மீட்பதற்கு காலவரையறை சட்டம் பொருந்தாது என சொல்லி பிரிவு 109 தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சட்டம் கீழ்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளதாக கண்டு மேற்படி சட்டபிரிவு அடங்கிய பக்கத்தை வா.சா.ஆ.34 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரிவு 109 தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சட்டம் கீழ்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது.

"***109 Central Act 36 of 1963 not to apply for recovery of properties of religious institution–Nothing contained in the Limitation Act, 1963 (Central Act 36 of 1963) shall apply to any suit for possession of immovable property belonging to any religious institution or for possession of any interest in such property என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்படி சட்டபிரிவை பிரிவு 1 HR& CE Act ஓடு சேர்த்து பார்க்க வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. பிரிவு 1 HR & CE Act கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது.***

***பிரிவு 1 Short titile, extent, application and commensement 1) This Act any may be called the (Tamil Nadu) Hindu Religious and charitable Endowments Act, 1959. 2) It extends to the whole of the (State of Tamil Nadu) 3) It applicable to all Hindu public religious institutions and endowments (including) the incorporated Dewaswoms and unincorporated Dewaswoms***." என சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஓ.ஏ.எண்.109/1969ல் இந்த வாதி கோவிலின் நிர்வாக அறங்காவலரின் மாமனாரான திருவேங்கடம் செட்டியார் தாவா கோவிலை Private Temple என அறிவிக்கக்கோரி மனு செய்திருந்ததில் அதனை தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி Private Temple என்று அறிவிக்கக் கோரிய பரிகாரம் மேற்படி மனுவில் கண்ட மனுதாரர்களுக்கு பாதகமாக முடிந்ததினாலேயே தாவா கோவிலை Public Temple என கருத முடியாது என்றும் தாவா கோவிலானது Private Temple என அசல் வழக்கு எண்.71/2019ல் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பது பி.வா.சா.ஆ.24 மேற்படி தீர்ப்புரையினை பரிசீலனை செய்த வகையில் அறிய முடிகிறது. அந்த வகையில் தாவா கோவில் Private Temple என்பதை வாதியே தனது பிராதின் 2வது பத்தியிலும் ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி பிரிவு 1 HR & CE Act ஆனது Public Templeக்கு மட்டுமே மேற்படி சட்டம் பொருந்தும்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:32:38 +0530

என்று சொல்லியுள்ள நிலையில் மேற்கண்ட சட்டபிரிவு 109ன் கீழான பலன்கள் தாவா கோவிலுக்கு கிடைக்கக்கூடியதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அந்த வகையில் தாவா வழக்கிற்கு காலவரையறை சட்டம் பொருந்தாது என்ற வாதி கோவிலின் கூற்று ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல எனவும், மேலும் தாவா கோவிலின் நிர்வாக அறங்காவலராக இருந்து இந்த தாவாவை தாக்கல் செய்துள்ள வாதிக்கு மேற்படி 05.03.1999ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை பொறுத்து கடந்த 2000ம் ஆண்டு தெரிய வந்ததாக சொல்லியுள்ள நிலையிலும், வாதி கோவிலின் நிர்வாக அறங்காவலரின் கணவரும் மேற்படி ஆவணத்தில் தரப்பினர் என்ற அடிப்படையிலும் அவருக்கு முன்கூட்டியே மேற்படி ஆவணத்தை பற்றி தெரிய வந்த நிலையில், காலவரையறை சட்டத்திற்கு உட்பட்டு மேற்படி ஆவண தேதியிலிருந்தோ அல்லது அவருக்கு மேற்படி ஆவணம் குறித்த விபரம் தெரிய வந்த 2000ம் ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் மேற்படி ஆவணத்தை செல்லாது என அறிவிக்கக்கோரி வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாததனால் மேற்படி வாதி கேட்டுள்ள 05.03.1999ம் தேதியிட்ட ஆவணம் செல்லாது என்ற பரிகாரம் காலவரையறை சட்டத்தின் அடிப்படையிலும், மேற்படி ஆவணத்தில் கண்ட அனைத்து தரப்பினர்களையும் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காத தோஷத்தினாலும் வழக்கு பாதிப்படைந்துள்ளதால் மேற்படி 05.03.1999ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை பொறுத்து கேட்டுள்ள Null and Void என்ற விளம்புகை பரிகாரம் வாதி கோயிலுக்கு கிடைக்கத்தக்கதல்ல என கூடுதல் எழுவினா–3 வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**19) எழுவினா 2 மற்றும் 4**

தாவா புல எண்.93/1ல் கட்டுப்பட்ட 70 செண்ட் இடமானது வாதி கோயிலுக்கு பாத்தியப்பட்டதா மற்றும் தாவா சொத்தை பொறுத்து வாதி கோரும் விளம்புகை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா என்பதை பரிசீலனை செய்கையில், வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 தாவா கோவிலுக்கான சொத்து ரிஜிஸ்டரில் 7வது பக்கத்தில் 2வது அயிட்டமாக தாவா புல எண்.93/1 70 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து தாவா புல எண்.93/1ல் அடங்கிய மொத்த விஸ்தீரணம் 70 செண்டும் கோவிலுக்கு பாத்தியப்பட்டதாக இருந்து வந்துள்ளது

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:32:42 +0530

என்பதை அறிய முடிகிறது. அதே சமயம் மேற்படி புல எண்ணில் கண்ட 70 செண்டில் 40 செண்டை பொறுத்து வா.சா.ஆ.7 பாகப்பிரிவினை பத்திரம் திருவேங்கடம் செட்டியாரின் வாரிசுகளுக்குள் ஏற்படுத்தப்பட்டு அவரவர் பாகத்தில் தலா 10 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் இந்த நம்பர் 1ம் பிரதிவாதி தனக்கு கிடைத்த பாகத்திற்கு பட்டா மாற்றி அதில் வீடு கட்டி அனுபவம் செய்து வந்து வரிவகையறாக்கள் செலுத்தி வந்துள்ளார் என்பது பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் பி.வா.சா.ஆ.8 பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டா பி.வா.சா.ஆ.9 தாவா சொத்திற்கான அடங்கல், பிவா.சா.ஆ.13 மற்றும் பி.வா.சா.ஆ.14 வீட்டு வரி ரசீதுகள் மூலம் நிரூபணமாகிறது. 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்ய சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவிட்டிருந்த போதிலும் பட்டா உரிமைமூல ஆவணம் அல்ல என்ற அடிப்படையிலும், தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு கிடைத்த பாகத்தில் 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்பது பிரதிவாதி தரப்பு சான்றாவணங்களின் அடிப்படையில் தெரிய வருவதிலிருந்தும் தாவா வழக்கு காலங்கடந்து தாக்கல் செய்துள்ளதால் 05.03.1999ம் தேதியிட்ட பாகபத்திரம் ரத்து செய்ய இயலாது என்ற அடிப்படையிலும், மேற்படி பாகப்பத்திரம் நாளது தேதியில் ஊர்ஜிதத்தில் இருப்பதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தில் 10 செண்ட் நிலம் 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருப்பதாக நிரூபணம் ஆகியுள்ளதால் வாதிக்கு தாவா புல எண்ணில் அடங்கிய 70 செண்ட் நிலமும் நாளது தேதியில் பாத்தியமுடையதல்ல என்றும், வாதி தாவா சொத்து மொட்டையசுவாமி கோவிலுக்கு பாத்தியமுடையது என்ற விளம்புகை பரிகாரமும் காலங்கடந்து தாக்கல் செய்துள்ளதால் காலாவதி தோஷத்தால் பாதிப்படைந்துள்ளது என்ற அடிப்படையில் வாதி கேட்டுள்ள விளம்புகை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்து எழுவினா 2 மற்றும் 4 வாதிக்கு எதிராக தீர்மானிக்கப்படுகிறது.

<u>20)எழுவினா-5</u>

தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி அவருக்கு 05.03.1999ம் தேதியிட்ட பாக பத்திரத்தின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற 10 செண்ட் நிலத்தில் வீடு கட்டி குடியிருந்து அனுபவம் செய்து வருகிறார் என்பது பிரதிவாதி தரப்பு சான்றாவணங்களின்

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.04.07 18:32:47 +0530

அடிப்படையில் நிரூபணம் ஆகியுள்ளதால் வாதி இந்த தாவாவை சுவாதீன பரிகாரம் கோரி தான் தாக்கல் செய்திருக்க வேண்டுமே தவிர வாதி கோவிலின் அனுபவத்தை பிரதிவாதிகள் எவ்வித தடையோ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்ற அடிப்படையில் வாதி கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்து எழுவினா–5 வாதிக்கு எதிராக தீர்மானிக்கப்படுகிறது.

**21)கூடுதல் எழுவினா 4 மற்றும் 5**

இவ்வழக்கில் வாதி கோரும் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது, வில்லங்கம் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களும் அனுசியா உதவியுடன் 1ம் பிரதிவாதி இடைஞ்சல் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் அவருக்கு கிடைக்ககூடியதா என்று பரிசீலனை செய்கையில் தாவா வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிப்படைந்துள்ளதால் வாதி கேட்டுள்ள விளம்புகை பரிகாரங்கள் அவருக்கு கிடைக்காத நிலையில் வாதி கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களும் அவருக்கு கிடைக்கக்கூடியதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்து, கூடுதல் எழுவினா 4 மற்றும் 5க்கு தீர்மானிக்கப்படுகிறது.

22) இவ்வழக்கில் வாதிக்கு அவர் கேட்டுள்ள விளம்புகை பரிகாரங்களும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களும் மேலே விவரிக்கப்பட்ட எழுவினாக்களில் கிடைக்கக்கூடியதல்ல என தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையிலும் தாவா கோவில் Private Temple என்பதால் HR&CE Act பொருந்தாது என ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் இவ்வழக்கு HR&CE Actல் தடை செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து தீர்மானிக்க வேண்டிய அவசியம் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**23) எழுவினா–6**

இவ்வழக்கில் மேலே விவரிக்கப்பட்ட எழுவினாக்களின் அடிப்படையில் வாதி கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்காது என தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், தரப்பினர்களுக்கு வேறு எந்த பரிகாரங்களும் கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.04.07 18:32:53 +0530

24) **முடிவாக**, வாதி கேட்டுள்ள தாவா சொத்து வாதி அருள்மிகு மொட்டையாசாமி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரமும் 05.03.1999ம் தேதியிட்ட பாகப்பத்திரம் செல்லாது (Null and Void) என்ற விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களும் கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்து, வாதியின் தாவா தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் வருடம் ஏப்ரல் மாதம் 07–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:32:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| **1. வாதி தரப்பு சாட்சிகள்** | |
|---|---|
| வா.சா.1 | உய்யாராணி (மொட்டையசாமி கோயில் மேனேஜிங் ட்ரஸ்டி) |

| **2. வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 30.08.1960ம் தேதியிட்ட ஓ.ஏ.எண்.109/1959ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 31.03.1987ம் தேதி மதுரை இராமநாதபுரம் (முகாம்) உதவி ஆணையாளர் பிறப்பித்த உத்தரவின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 10.03.2000ம் தேதியிட்ட சிவகங்கை இணை ஆணையாளர் அளித்த அறிக்கை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 27.03.2000ம் தேதியிட்ட பா.மு எண்.8176/1999ல் பிறப்பிக்கப்பட்ட HR &CE வழங்கிய உத்தரவின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 22.05.2000ம் தேதியில் நடந்த அறங்காவலர் குழு கூட்டத்தில் வாதி அறங்காவலர் குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட தீர்மானத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பரமக்குடி உதவி ஆணையாளர் 26.08.2009ம் தேதி அனுப்பிய தபாலின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | 05.03.1999ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பாகவஸ்தி பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | தாவா சொத்திற்குரிய வருவாய் துறை அ பதிவேடு |
| வா.சா.ஆ.9 | மொட்டையசாமி கோவிலின் சொத்து ரிஜிஸ்டர் |

| | |
|---|---|
| வா.சா.ஆ.10 | கடந்த 14.12.1999ம் தேதி இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் A.P.No.16/99ல் தாக்கல் செய்த மேல்முறையீட்டின் உத்தரவு சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.11 | ஒ.எஸ்.119/2000 என்ற வழக்கில் சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் ஏற்பட்ட தீர்ப்பின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.12 | ஒ.எஸ்.119/2000 தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.13 | 24.06.2005ம் தேதி சிவகங்கை, மாவட்ட நீதிமன்றத்தில் ஏ.எஸ் 74/2004 தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்ட மேல்முறையீட்டின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.14 | 24.06.2005ம் தேதி சிவகங்கை, மாவட்ட நீதிமன்றத்தில் ஏ.எஸ் 74/2004 தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்ட மேல்முறையீட்டின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.15 | கடந்த 28.05.2008ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.16 | 1ம் பிரதிவாதி கடந்த 13.06.2008ம் தேதி அனுப்பிய பதில் அறிவிப்பு சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.17 | தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட மின் இணைப்பு எண்.1121க்கான மின் கட்டண ரசீதுகள் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.18 | மொட்டையசாமி கோவில் திருப்பணி அழைப்பிதழ் |
| வா.சா.ஆ.19 | 1ம் பிரதிவாதி சட்டவிரோதமாக வசூலித்த நன்கொடை ரசீது |
| வா.சா.ஆ.20 | வாதியும், மற்ற அறங்காவலர்களும் சேர்ந்து 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் சட்ட விரோதமாக செய்துள்ள கட்டுமானங்களை பொறுத்து காவல் நிலையத்தில் 22.01.2013ம் தேதி கொடுத்த புகார் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.21 | வாதி கோயிலுக்கு பாத்தியமான சொத்தினை சேதப்படுத்திய காரணத்திற்காக அவர் மீது கடந்த 03.04.2013ம் தேதி திருப்புவனம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.22 | முத்துலெட்சுமி, இராசாத்தி, மற்றும் வாதியின் அறங்காவலர்கள் என்ற ஹோதாவில் 1ம் பிரதிவாதி மீது காவல்நிலையத்தில் 13.10.2013ம் தேதி கொடுத்த புகார் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.23 | வாதி 18.10.2013ம் தேதி அளித்த புகாருக்கு காவல்துறையினர் கொடுத்த ரசீது சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.24 | மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மூன்று விதமான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்த வழக்கு பிராதின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.25 | மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை சான்றிட்ட நகல் |

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.04.07 18:33:05 +0530

| | |
|---|---|
| வா.சா.ஆ.26 | 1ம் பிரதிவாதி அந்த வழக்கில் நிராகரிக்கப்பட்டு வாதிக்கு சாதகமாக கடந்த 28.08.2015ம் தேதி தீர்ப்பளிக்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.27 | 1ம் பிரதிவாதி அந்த வழக்கில் தெரிவித்தது நிராகரிக்கப்பட்டு வாதிக்கு சாதகமாக கடந்த 28.08.2015ம் தேதி தீர்ப்பளிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.28 | வா.சா.ஆ.26, 27 உத்தரவு பிறப்பித்ததை மீறும் விதமாக அடிக்கடி தாவா சொத்தினை 1ம் பிரதிவாதி கையகப்படுத்த முயற்சி செய்தார். அதன் காரணமாக கடந்த 22.03.2016ம் தேதியிட்ட நடவடிக்கை மூலமாக பூசாரித்தனத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளார் அதன் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.29 | வாதி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் Crlop No.23625/2015 தாக்கல் செய்து காவல்துறை பாதுகாப்பு கோரி வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த மனுவின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.30 | 1ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட பட்டாவின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.31 | மேற்படி பட்டா வழங்கப்பட்டதினை எதிர்த்து வாதி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் W.P.No.21540/2016தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது.அந்த நீதிப்பேராணை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.32 | வாதி பிரதிவாதிகள் மீது கடந்த 25.11.2016ம் தேதி காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் வாதிக்கு C.S.R.No.707/2016ல் வழங்கப்பட்ட ரசீது |
| வா.சா.ஆ.33 | நீதிமன்ற கட்டணத்தினை பொறுத்து தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்ட அரசாணை 363 தேதி 09.04.2010 சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.34 | இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 109 நகல் |
| வா.சா.ஆ.35 | தாவா கோவிலை பொறுத்து தனிக்கை அறிக்கை அசல் |
| வா.சா.ஆ.36 | 13.12.2012ம் தேதி ஏற்படுத்தப்பட்ட வாடகை ஒப்பந்த பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.37 | தாவா கோவில் மற்றும் தாவா சொத்து அமைப்பு புகைப்படம் அசல் |
| வா.சா.ஆ.38 | தாவா கோவில் மற்றும் தாவா சொத்த அமைப்பு மற்றும் ஆக்கிரமிப்புகளை காட்டக்கூடிய புகைப்படம் அசல் |
| வா.சா.ஆ.39 | தாவா கோவில் மற்றும் தாவா சொத்த அமைப்பு மற்றும் ஆக்கிரமிப்புகளை காட்டக்கூடிய ஒளித்தகடு அசல் |
| வா.சா.ஆ.40 | 1ம் பிரதிவாதி அவருடைய மனைவி அனுசியாவுடன் சேர்ந்துகொண்டு சட்டவிரோத செயலின் உச்சமாக அறங்காவலர் மற்றும் வழக்கறிஞர் பெயரினை பொய்யாக உபயோகித்து O.S.No.148/2009என்ற வழக்கினை மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.41 | கடந்த 08.02.2007ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய தபாலின் சான்றிட்ட நகல் |

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.04.07 18:33:10 +0530

| | |
|---|---|
| வா.சா.ஆ.42 | தாவா சொத்து பொறுத்து வழங்கப்பட்ட பட்டா அசல் |
| வா.சா.ஆ.43 | தாவா சொத்தினை பொறுத்து செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.44 | தாவா சொத்தினை பொறுத்து சிவகங்கை இணையவழி ஜமாபந்தி ரிஜிஸ்டர் – சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.45 | 16.03.2016ம் தேதி வரை மொத்தம் 70 செண்டிற்கும் கோயில் பெயரில் தான் பட்டா உள்ளது அதனை காட்டக்கூடிய நில உரிமை பட்டா அசல் |
| வா.சா.ஆ.46 | வாதி 1ம் பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ள ஓ.எஸ்.எண்.107/2014 வழக்கில் அவருக்கும், அவருடைய மனைவி அனுசுயாவிற்கும் எதிராக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.47 | வாதி 1ம் பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ள ஓ.எஸ்.எண்.107/2014 வழக்கில் அவருக்கும், அவருடைய மனைவி அனுசுயாவிற்கும் எதிராக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.48 | கடந்த 05.02.2018ம் தேதி பதவி நீக்கம் செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.49 | 05.03.1999ம் தேதி சட்ட விரோதமாக ஏற்படுத்தப்பட்ட பாக பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.50 | தாவா சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து பிரதிவாதிகள் தங்களுடைய பெயரில் பெற்றுள்ள பட்டாவின் கணிணி நகல் |
| வா.சா.ஆ.51 | ஏ.எஸ்.எண்.18/2019 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புரை |
| வா.சா.ஆ.52 | ஏ.எஸ்.எண்.18/2019 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பாணை |
| வா.சா.ஆ.53 | சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் 05.12.2022ம் தேதியிட்ட ஆணை |
| வா.சா.ஆ.54 | W.P.No.21540/2016 உத்தரவு |
| வா.சா.ஆ.55 | 25.10.1923ம் தேதியிட்டு சேவுகன் செட்டியார் முகமது காதியார் ராவுத்தருக்கு எழுதிக்கொடுத்த ஒத்தி ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.56 | 17.09.1957ம் தேதியிட்டு சேதுவேல் செட்டியார் வகையறா திருப்புவனம் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்த வாடகை ஒப்பந்த ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.57 | 14.07.1965ம் தேதியிட்டு சேதுவேல் செட்டியார் வகையறா திருப்புவனம் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யாத வாடகை ஒப்பந்த ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.58 | மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற மு.வ.எண்.86/1968 வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.59 | சிவகங்கை இந்துசமய அறநிலைய இணை ஆணையர் எம்பி.எண்.2/92/சி2–வில் 20.04.1999ம் தேதியிட்டு பிறப்பித்த உத்தரவு |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.04.07 18:33:16 +0530

| | |
|---|---|
| | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.60 | சிவகங்கை இந்து சமய அறநிலைய இணை ஆணையர் எம்பி.எண்.5/2021ல் பிறப்பித்த உத்தரவு சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.61 | சிவகங்கை இந்து சமய அறநிலையதுறை இணை ஆணையர் எம்பி.எண்.8/2021ல் பிறப்பித்த உத்தரவு சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.62 | சிவகங்கை இந்து சமய அறநிலையதுறை இணை ஆணையர் எம்பி.எண்.6/2021ல் பிறப்பித்த உத்தரவு சான்றிட்ட நகல் |

| |
|---|
| **பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்** |
| பி.வா.சா.1 –T.செல்வராஜ் |
| 3. **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:** |

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.1 | பட்டா எண்.1115ல் வாசு மனைவி முத்துலெட்சுமி, லட்சுமிபிரியா , சரண்யா, கணேஷ்வரி ஆகியோர்கள் பெயரில் ஏற்பட்ட பட்டா இணையவழி பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ.2 | சர்வே எண்.93/1A–க்கு திருவேங்கடம் செட்டியார் பெயரில் ஏற்பட்ட பட்டா பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ.3 | தாவா சொத்திற்கான ஜமீன் காலத்திற்கான வருவாய் ஆவணப் பதிவேடு சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.4 | மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற மு.வ.எண்.65/1939க்கான தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.5 | சிவகங்கை சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு எண்.7/1941 தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.6 | புல எண்.93/1க்கான அ பதிவேடு சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.7 | 05.03.1999ம் தேதியிட்ட பாக ஆவணம் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.8 | பட்ட எண்.1024ல் 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள கணிணி பட்டா இணையவழி பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ.9 | புல எண்.93ன் உட்பிரிவுகளுக்கான அடங்கல் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.10 | புல எண்.93ன் உட்பிரிவுகளுக்கான அடங்கல் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.11 | பட்டா எண்.1115ல் முத்துலட்சுமி பெயரிலுள்ள கணிணி கூட்டு பட்டா இணையவழி பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ.12 | தாவா சொத்திற்கான புல வரைபடம் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.13 | 23.07.2021ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள தீர்வை ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.14 | 08.11.2022ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள தீர்வை ரசீது |

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.04.07 18:33:21 +0530

| | |
|---|---|
| | அசல் |
| பி.வா.சா.ஆ.15 | தாவா சொத்தை காட்டக்கூடிய புகைப்படங்கள் (9 எண்ணம்) |
| பி.வா.சா.ஆ.16 | தாவா சொத்தை காட்டக்கூடிய புகைப்படங்களின் குறுந்தகடு |
| பி.வா.சா.ஆ.17 | தாவா சொத்திற்கான சொத்து வரி ரசீதுகள் (5 எண்ணம்) |
| பி.வா.சா.ஆ.18 | 01.06.2017ம் தேதியிட்டு தாவா சொத்தில் அனைவரும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட அனுமதி உத்தரவு அசல் |
| பி.வா.சா.ஆ.19 | இந்து சமய அறநிலையதுறை சிவகங்கை இணை ஆணையரின் 18.11.2019ம் தேதியிட்ட உத்தரவு அசல் |
| பி.வா.சா.ஆ.20 | 24.11.1984ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி வகையறா செண்பகமூர்த்திக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.21 | 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள மின்கட்டண ரசீதுகள் (2 எண்ணம்) அசல் |
| பி.வா.சா.ஆ.22 | இந்து சமய அறநியலையதுறை சிவகங்கை இணை ஆணையரின் அசல் மனு எண்.8/21ல் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பு சார்பு நகல் |
| பி.வா.சா.ஆ.23 | சிவகங்கை மாவட்ட ஆட்சியரின் 04.02.2021ம் தேதியிட்ட விசாரணை அறிவிப்பு சார்பு நகல் |
| பி.வா.சா.ஆ.24 | இந்நீதிமன்ற மு.வ.எண்.71/2019ன் தீர்ப்புரை சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.25 | இந்நீதிமன்ற மு.வ.எண்.71/2019ன் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |

4. நீதிமன்ற சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.04.07 18:33:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை**
**நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**அசல் வழக்கு எண்.69/2019**
**தீர்ப்புரை**
**வரைவு/சீரான**
**நாள்:07.04.2026**